318

# E, S, L, C. GOVERNMENT EXAMINATIONS

## QUESTION PAPERS FROM 1942.

1942-ம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டுவரை

சர்க்கார் E. S. L. C. பரீட்சைக்கு வந்த

# கேள்வித் தாள்கள்

இதில், தமிழ், கணக்கு, சரித்திரம், பூமி
சாஸ்திரம் அரசியல் முறை,, இங்கிலீஷ்
பாடக் கேள்விகள் மட்டும் உள்ளன

3/48

P 1949
MADRAS

விலை அணா 8.

பிரசுரித்தவர்கள் :

**சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ்**

66, முருகப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,

**வேப்பேரி, மதராஸ் 7.**

MADRAS STOCKiST

| M/s P. T. Bell & Co., | M/s M. Doraiswamy Mudaliar |
|---|---|
| (Book-Sellers & Publishers) | *1-7, Malayaperumal Street,* |
| *7, Sunkkurama Chetty St.* | *G. T. Madras, 1.* |
| *G. T. Madras, 1.* | |

ஸ்தகமும் 1. கணக்கு, 2. சரித்திரம், 3. பூமி சாஸ்திரம்,
ஞ்ஞானப் பாடங்களுக்கு' வினவிடையாக எம்மால்,
ம் சேர்ந்து ரூ. 1—12—0. எம்மிடம் கிடைக்கும்.)

# E. S. L. C. Government Examinations

## Question Papers From 1942

## VIII STANDARD PUBLIC EXAMINATION

## 1942

### LANGUAGE—TAMIL

*Time*—Two hours

Marks

I. (a) 'திருக்குறள்' இயற்றப்பட்டது எப்போது? அதில் எத்தனை பால்கள் உள்ளன? 2+2

(b) எது உயிரினும் ஓம்பப்படும்? ஏன்? 6

(அல்லது)

எவைக் கூடப்பெறின் மக்கட் பிறப்பே சிறந்தது?

(c) தமயந்தி சுயம்வரத்திற்கு "ஈரிருவர் தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்"—அத்தேவர்கள் யார்? 2

(அல்லது)

தமயந்தி உண்மை நளனை எவ்வாறு அறிந்து கொண்டாள்?

(d) திருப்புன்கூரில் நந்தி விலகி நிற்கவேண்டி, சிவபெருமான் நந்தியிடம் சொன்ன நீதிகளைக் கூறுக. 5

II. (a) "அரியது கேட்கின்......" என்ற பாடல் யார் பாடியது? அப்பாடலை அடிபிறழாமல் எழுதுக. 1+5

(b) அடியிற்கண்ட செய்யுளுக்குப் பதவுரை எழுதுக:— 5

"சொல்லாமலே பெரியர்; சொல்லிச்செய்வார் சிறியர்;
சொல்லியும் செய்யார் கயவரே;—நல்ல
குலா மாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடின்
பலா மாவைப் பாதிரியைப் பார்.

(c) இப்பாட்டின் உவமான உவமேயங்களைக் குறிக்க. 2

(d) இப்பாட்டிலிருந்து (1) பலர் பாற் பெயர்ச்சொல், (2) அஃறிணைப் பெயர்ச்சொல், (3) எட்டாம் வேற்றுமை. (4) ஏவல் வினைமுற்று இவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக. 4

III. (a) (1) பஞ்ச தந்திரங்கள் யாவை? (2) அவற்றுள் இரண்டினுக்குப் பொருள் கூறுக. 5+2

(அல்லது)

பொருளினாலேயே செய்யக்கூடிய உத்தம தருமங்களுள் ஏதேனும் ஐந்து எழுதுக. பொருளிலார் எப்படித் தருமம் செய்வது?

(b) "பெருமையும் சிறுமையும் அவர் அவராலேயே வரும்." என்பதைத் தமனகன் கரடகனுக்கு எப்படி விளக்கினது? 5

(அல்லது)

ஆடு முதலிய பிராணிகளைப் பலியிடுவது கூடாது, என்பதைச் சித்தார்த்தர் எப்படி விளக்குகிறார்?

IV. (a) சீதா பிராட்டியார் சொல்லியதாக இராமலக்ஷ்மணருக்குத் தான் என்ன சொல்லுவது என்று அநுமான் கேட்டதற்குச் சீதை தந்த விடையைச் சுருக்கி எழுதுக. 8

(d) சடையப்ப வள்ளல் யார்? அவருடைய ஊர் எது? 4

(அல்லது)

சேக்கிழார் பெரிய புராணம் இயற்றியதின் காரணம் என்ன?

(c) நால்வகை அரண்கள் யாவை? 4

V. (a) ஹர்ஷர் தம் நாட்டிற்கும் குடிகளுக்கும் செய்த நன்மைகள் யாவை? 10

(அல்லது)

விவசாயி கடனாளியாக இருப்பதால் படும் கஷ்டங்களை எழுதுக.

(d) அடியிற்கண்டவைகட்குப் பொருள் கூறுக:— 8

(1) மடப்பாவை, (2) தார்வேந்தன், (3) கயவர், (4) ஏமாப்பு, (5) அம்புஜம், (6) பூங்குழலாள்.

VI. அடியிற்கண்டவைகளுள் ஏதேனும் ஒன்றைப்பற்றி 20 வரிகளுக்கு மேற்படாமல் ஒரு வியாசம் எழுதுக:— 20

(1) தபால் ஆபிஸ், (2) சமாசாரப் பத்திரிகைகள், (3) உள் ஊரில் கூடும் சந்தை அல்லது நடைபெறும் திருவிழா.

Total ... 100

# ELEMENTARY MATHEMATICS

*Time*-Two hours

**Marks**

**I.** (1) ஒரு வண்டி $\frac{1}{3}$ டன் (ton) பாரத்தைமட்டிலும் தாங்கும். மனிதன் ஒவ்வொருவனும் 160 ராத்தல் (lbs.) நிறை வீதம் 5 மனிதர்களின் நிறையை அந்த வண்டி தாங்குமா? **9**

(2) கீழ்வரும் எண்களின் சராசரியைக் கண்டு பிடிக்க:—

$4\frac{7}{16}$. $4\frac{1}{2}$, $4\frac{9}{16}$, $4\frac{3}{8}$.

இந்த எண்களுள் எவை அந்தச் சராசரியைப் பார்க்கிலும் பெரியவை என்று கூறுக.

(3) $\frac{14}{25}$ க்குச் சமமான தசம பின்னத்தை (decimal ஐ, பதின் பின்னத்தைக்) கண்டு பிடிக்க.

**II.** (1) ஒரு நிதிக்காக 89,99,996 ரூபாய்த் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. அதை ஒரு கோடி ரூபாய் ஆக்க, எவ்வளவு பணம் அதிகம் வசூலிக்கப்படவேண்டும்? **9**

(2) ஒரு முக்கோணத்தின் இரண்டு கோணங்கள் முறையே 102 டிகிரீ (degrees. பாகைகள்) 32 டிக்ரீ அளவு உள்ளவை. மூன்றாவது கோணத்தின் அளவு இத்தனை டிக்ரீ என்பதைக் கண்டு பிடிக்க.

**III.** கீழே காலிவிடப்பட்ட இடங்களை நிரப்பக்கூடிய பொருத்தமான தொகைகளைக் கண்டுபிடிக்க:— **9**

(1) $\frac{\quad}{25} = \frac{12}{15}$

(3) நூறு பழங்களுக்கு ரூபாய் 3 வீதம், 375 மாம் பழங்கள் வாங்கி, அவைகளை டஜனுக்கு (dozen-க்கு) 12 அணு வீதம் விற்பதில் கிடைக்கும் இலாபம் (    ) ஆகும்.

**IV.** பால் ரூபாய்க்கு $2\frac{1}{4}$ படி வீதம் விற்கிறது. எங்கள் வீட்டுக்கு ஒவ்வொரு நாளும் காலையில் $\frac{3}{4}$ படி பாலும் மாலையில் $\frac{7}{8}$ படி பாலும் நாங்கள் வாங்குகிறோம். அப்படியானால், 365 நாட்கள் கொண்ட ஒரு வருஷத்துக்கு எங்கள் வீட்டுப் பால் செலவு எவ்வளவு ஆகும்? **9**

**V.** சதுர (square) வடிவம் உள்ள ஒரு நிலம் ஒரு பர்லாங்கு (furlong) நீளம் கொண்டது. ஒருமணிக்கு **9**

3 மைல் (miles) வேகம் வீதம் நடக்கின்ற ஒரு மனிதனுக்கு அந்த நிலத்தை ஒரு முறை சுற்றிவர எவ்வளவு நேரம் பிடிக்கும்?

VI. ஒரு மாகுல் காலத்தில் ஒரு வயலில் விளைவு 3,300 படி நெல் ஆகின்றது. இந்த விளைவை நில உடையாளியும் பயிரிடுபவனும் 17 ஆகது 8-க்குள்ள வீதத்தில் (ratio-ல்) தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டால் நில உடையாளிக்கு எத்தனை படி நெல் கிடைக்கும்? 9

VII. ஒரு நிதியிலிருந்து (bank-ல்) நான் ரூபாய் 250 கடன் வாங்கி, அதை ஆறு மாதங்களுக்குப்பிறகு வருஷத்துக்கு நூற்றுக்கு $6\frac{1}{4}$ வீதம் தனி வட்டியோடு திரும்பச் செலுத்துகிறேன். இவ்வாறு நான் திரும்பச் செலுத்தும் தொகை (வட்டி உள்பட) எவ்வளவு? 9

VIII. ஒரு சுவர் 14 அடி நீளம், 10 அடி 6 அங்குலம் உயரம், 9 அங்குலம் கனம் கொண்டது. அது எத்தனை கன அடி (cubic feet) இடத்தை அடைக்கும்? 9

IX. ஒரு பட்டணத்தின் ஜனத்தொகை 1931-ல் 24,000 ஆகவும் 1941-ல் 25,500 ஆகவும் இருந்தது. (1941-ல்) அதன் ஜனத்தொகை நூற்றுக்கு எத்தனை வீதம் அதிகம் ஆகியுள்ளது? 9

X. நீங்கள் இப்போது விடை அளிக்கும் கேள்வித் தாளின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து எழுதுக. அந்தத்தாளின் பரப்பு (area, விஸ்தீர்ணம்) இவ்வளவு சதுர அடி என்று கண்டுபிடிக்க. 9

XI. 'A' என்னும் கிராமம் 'B' என்னும் கிராமத்துக்கு 3 மைல் நேர்கிழக்கே இருக்கிறது. 'C' என்னும் கிராமம் 'A' என்னும் கிராமத்துக்கு 4 மைல் நேர் தென் கிழக்கே இருக்கிறது. அம்மூன்று கிராமங்களும் இருக்கும் தனித்தனி இடங்களைக் குறிக்க, வீதக்குறிப்பு வைத்து (scale-க்கு) ஒரு படம் வரைக. அப்படத்திலிருந்து அளவு எடுத்து 'B' என்னும் கிராமத்திலிருந்து 'C' என்னும் கிராமத்துக்குப் போகும் நேர்பாதை வழியாக அந்த இரண்டு கிராமங்களுக்கும் இடையே இத்தனை மைல் தூரம் என்பதைக் கண்டுபிடிக்க. 10

Total . . 100

# HISTORY, GEOGRAPHY AND CIVICS

*Time*—Two hours

Marks

## சரித்திரம்

I. கீழ்க்கண்டவற்றின் முக்கியத்தை ஒரு வாக்கியத்தில் எழுதுக :— 12

முதல் பானிப்பட் சண்டை, பிளாசி சண்டை, தலைக்கோட்டை சண்டை.

II. (a) முகலாய சாம்ராஜ்ய அழிவுக்கு இரண்டு காரணங்கள் கூறுக. 6

(b) இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் ஓர் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கத் தவறிவிட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறுக. 6

III. பின் வரும் ஒவ்வொன்றைக் குறித்தும் ஒரு வாக்கியம் எழுதுக :— 6

மகா வீரர், யூவான்ஷாங், குரு நாநக்.

IV. தாங்கள் செய்த எந்த ஒரு செயலால் அடியிற் கண்டவர்கள் நினைவு கூறப்படுகிறார்கள் ?— 8

வாஸ்கோடிகாமா, ஷாஜஹான், விக்டோரியா மகாராணி, ரிப்பன் பிரபு.

## பூமி சாஸ்திரம்

V. கீழ்க்கண்ட விபரங்களுக்குக் காரணங்கள் கூறுக :— 15

(a) மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த பிரதேசங்களில், மித சீதோஷ்ண நிலை இருப்பது.

(b) ஆப்பிரிக்காவின் உள்பாகம் மித உஷ்ணமாய் இருப்பது.

(c) சைபீரியா அதிகச் சீதளமாய் இருப்பது.

(d) சிந்து பிரதேசத்தில் மழை அதிக குறைவாய் இருப்பது.

(e) மலையாளத்தில் அதிக மழை இருப்பது.

VI. (a) நைல் நதியில் வருஷ முழுவதும் ஜலம் நிறைந்திருப்பதேன்? 12

(b) அடியிற் கண்டவற்றுள் பூமத்திய ரேகைக்கு அதி சமீபமாயிருப்பதெது?—
சென்னப்பட்டணம், சிங்கப்பூர், டோக்கியோ, ஏதென்.

(c) மத்திய ஆசியாவின் நதிகளில் மிகப் பெரியவை இரண்டு கூறுக.

(d) வட, தென் அமெரிக்காவின் பெரிய மலைத் தொடர்களின் பெயரை எழுதுக.

VII. (a) (i) மண்ணெண்ணெய், (ii) பருத்தித் துணி, முதலியவற்றை இந்தியாவிற்கு அனுப்பும் இரண்டு நாடுகளின் பெயரைக் கூறுக. 8

(b) இந்தியாவிலிருந்து (i) கோணிப்பைகளையும், (ii) எண்ணெய் வித்துக்களையும் பெற்றுக் கொள்ளுகிற இரண்டு தேசங்களின் பெயரை எழுதுக.

VIII. கனடாவின் காட்டுப் பிரதேசத்திலும், மத்திய ஆசியாவின் புல் தரைகளிலும் வசிப்பவர்களின் முக்கியத் தொழில்கள் யாவை? 8

## ராஜாங்க நூல்

IX. கிராம பஞ்சாயத்தின் முக்கிய கடமைகள் யாவை? 5

X. கூட்டுறவு இயக்கத்தின் பிரமாணங்களில் முக்கியமானவை இரண்டைக் கூறுக. நில அடமான நிதிகள் (Banks) எக்காரியங்களுக்காகக் கடன் கொடுக்கின்றன? 8

XI. ஜலத்தின் மூலம் அதிகமாய், பரவுகிற ஒரு வியாதி கூறுக. அவ்வியாதி பரவாமல் தடுக்க எவ்வித பிரயத்தனங்கள் செய்யவேண்டும்? 6

Total....100

# 1943

## LANGUAGE—TAMIL

*Time*—Two hours

Marks

I. (a) 'குமரேச சதகம்' யாரால் இயற்றப்பட்டது? சதகம் என்றால் என்ன? 2+2

(b) நீங்கள் படித்த குமரேச சதகப் பாட்டில் காணும் பெரியோர் இயல்புகளுள் நான்கினை எழுதுக. 6

(c) 'திருவருட்பா'வை இயற்றியவர் யார்? அவர் காலம் எது? 2+2

(d) 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' —ஏன் 5

II. (a) நீங்கள் படித்த திருவருட்பாவில் காணும் ஆசிரியர் வேண்டுகோள்களில் ஏதேனும் ஐந்தினைக் கூறுக. 5

(b) கபிலர் அகவலில் 'குலமும் ஒன்றே' என்பது முதல் 'பேதையீரே' என்பது முடிய, அடி பிறழாமல் எழுதுக. 5

(c) அடியிற்கண்ட செய்யுளுக்குப் பதவுரை எழுதுக:— 6

"மாண்புறு கல்விமாந்தர் மடமையைக் கொல்வதல்லால்
பூண்பணி போன்று மக்கள் பொன்றிடக் கொல்லாதையா!
வீண்பழி சுமத்தல் நன்றே 'வித்தையால் விளிந்தான் என்றே;'
ஆண்பெண் ணென்றிரு பாலாரும் அறிவுறக்கற்கை நன்றால்."

(d) மேற்கண்ட செய்யுளில்—

(1) தடித்த எழுத்துக்கள் உள்ள பதங்களுக்கு இலக்கணம் கூறுக. 4

(2) எதிர்மறைக் குறிப்பு வினையெச்சத்திற்கு ஒரு உதாரணம் கூறுக. 2

III. (a) அடியிற்கண்ட வாக்கியங்களுக்குச் சந்தர்ப்பம் கூறுக:—

(1) 'தம்பி உடையவன் படைக்கஞ்சான்.' 3

(2) 'இளங்கன்று பயமறியாது' 3

(3) 'ஆசனசீதம் ஜீவன்நாசம்.' 3

(b) பரமார்த்த குரு இறந்த வரலாற்றைப் பத்து வரிகளுக்குள் எழுதுக; 10

(அல்லது)

சந்நியாசி பக்ஷிகளைச் சாம்பலாக்கிய கதையைப் பத்து வரிகளுக்குள் எழுதுக.

IV. (a) சைக்கிள் தன் சரித்திரத்தைத் தானே சொல்வது போல் எழுதுக. 6

(b) குணவதி ராஜ்ஜிய ஸ்ரீயைச் சிறையிலிருந்து எப்படி வெளியேற்றினாள்? 6

(அல்லது)

மோர் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

(c) அடியிற்கண்டவைகட்குப் பொருள் கூறுக. 8

(1) மருளாய, (2) விழுப்பம், (3) ஆங்கண், (4) கதிரோன், (5) வான்புகழ், (6) காணிக்கை, (7) குக்ஷிபாதை (8) தசைப்பொதி.

V. கீழ்க்கண்ட விஷயங்களுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி, சுமார் ஒரு பக்கத்துக்குள் வியாசம் எழுதுக :— 20

(1) மழையின் நன்மைகள்.

(2) உங்கள் பாடசாலை சேர்ந்து கொண்டாடின ஒரு விழா.

(3) பிராணிகளிடத்து அன்பு பாராட்டும் விதங்கள்.

Total ... 100

## ELEMENTARY MATHEMATICS

*Time*—Two hours

Marks

1. (1) 9,096 அடி நீளம் உள்ள கோதாவரி நதிப் பாலம், 1 மைல் 544 கஜம் நீளம் உள்ள மஹாநதிப் பாலம்—இவ்விரண்டுள் எது அதிக நீளமுள்ளது? எவ்வளவு அதிக நீளமானது? 11

(2) நான் ஒரு சாமானை, டன் (ton) ஒன்றுக்கு ரூ. 160 வீதம் கொடுத்து வாங்கி ஒரு ரூபாய்க்கு 10 ராத்தல் (pounds, lbs. பௌண்டு) வீதம் விற்றேன். இவ்விதம் செய்வதில் ஒரு டன்னின் மேல் எனக்கு ஏற்படும் இலாபமோ நஷ்டமோ எவ்வளவு?

II. (1) ஒரு ஆகாயவிமானம் 1 மணி 48 நிமிஷ நேரத்தில் 450 மைல் தூரம் பறந்து செல்கின்றது. அதன் வேகம் மணிக்கு 240 மைலைப் பார்க்கிலும் கூடுதலோ, குறைவோ என்பதைக் கண்டுபிடிக்க. 11

(2) ஒரு ஏக்கருக்கு (acre-க்கு) ரூ. 15 வீதம் 55 செண்டு (cents) நிலத்துக்கு நிலத்தீர்வையைக் கண்டுபிடிக்க.

III. (1) ஒரு கிராமத்திலுள்ள மரங்களுள் 22-க்கு 19 மரங்கள், மாமரங்கள். அந்தக் கிராமத்தில் மொத்தம் 342 மாமரங்கள் இருந்தால், இதர மரங்கள் இத்தனை என்பதைக் கண்டுபிடிக்க. 11

(2) 14 ரயில்வே மணங்கின் நிறை 1,152 ராத்தல் (lb.) கொண்டது எனக் கொடுக்கப்பட்டிருந்தால், ஒரு ரயில்வே மணங்கின் நிறை இவ்வளவு ராத்தல் (lb.) என்பதை ராத்தலின் நூற்றிலொரு பங்குக்குக் கிட்டியதாகக் (to the nearest hundreath of a lb.) குறிக்க.

IV. ஒரு கிராமத்திலிருக்கும் 6,640 ஏக்கர் (acre) நிலங்களில் ஒரு வருஷம் 2,324 ஏக்கர் நெல் பயிர். அந்த வருஷம் அந்தக் கிராமத்திலுள்ள நிலங்களுள் நெல்பயிரானவை நூற்றுக்கு எத்தனை ஆகும்? 11

V. ஒரு படகு, ஒரு கடற்கரைக் கிராமத்திலிருந்து புறப்பட்டு, நேர் கிழக்காக 5 மைல் தூரம் சென்று ஒரு சிறு தீவுக்குப் போய்ச் சேர்கிறது. பிறகு அந்தத் தீவை விட்டுப் புறப்பட்டு, வடகிழக்காக 10 மைல் தூரம் போய், பின் திசையை மாற்றி, நேர்மேற்காக 9 மைல் தூரம் போகின்றது. அவ்விதம் போனதும், அது (1) முதலில் புறப்பட்ட இடத்திலிருந்தும் (2) அந்தத் தீவிலிருந்து முறையே இன்னின்ன தூரத்தில் இருக்கிறது என்பதை, வீதக்குறிப்பு (scale, ஸ்கேல்) வைத்து ஒரு படம் (plan, ப்ளான்) வரைந்து அதனின்றும் கண்டுபிடிக்க. 12

VI. மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு 3 அணு 3 பை விதம் ரூ. 2,400-ஐ வட்டிக்குப் போட்டு வைப்பதால், கிடைக்கும் வட்டியிலிருந்து வெகுமதி ஒன்றுக்கு ரூ 11–8 அணு வீதம் 5 வெகுமதிகளை வருஷந்தோறும் அளிக்க முடியுமா என்பதைக் கண்டுபிடிக்க. 11

VII. ஒரு வைத்தியசாலை கட்டுவதற்கு 841 அடி நீளமும் 720 அடி அகலமும் கொண்ட (rectangle) வடிவமான நிலம் ரூ. 75,690 விலை கொடுத்து வாங்கப்படுகிறது. அது ஒரு சதுர கஜத்திற்கு என்ன விலை வீதம் அடங்குகிறது? 11

VIII. ஜனத்தொகை முறையே 650-ம் 950-ம் கொண்ட இரண்டு சிறு கிராமங்களுக்கு ஒரு பாடசாலை வகைக்கு ரூ. 5,000 வேண்டியிருக்கின்றது. ஜனத்தொகை விகிதப்படி மேற்கண்ட பணத்தொகையை அவர்கள் கொடுப்பதானால், அதிக ஜனத்தொகை உள்ள கிராமம் கொடுக்கும் பணத் தொகை எவ்வளவு? 11

IX. அடிப்பக்கம் (bottom) 321 அடி நீளம் கொண்ட ஒரு தட்டையான சதுரம் ஆகவும், விலாப்பக்கங்கள் செங்குத்தாகவும், வாய்ந்த ஒரு குளத்தில் 14 அடி ஆழம் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதில் அப்பொழுது எத்தனை க்யாலன் (gallons) தண்ணீர் உள்ளது? 4 கன அடி (cubic-feet)-க்கு 25 க்யாலன் (gallons) சமம் என்று கொண்டு கணக்கிடுக. 11

Total ... 100

## HISTORY, GEOGRAPHY AND CIVICS

*Time*—Two hours

### சரித்திரம்

Marks.

I. பின்வரும் ஒவ்வொன்றைக் குறித்தும் ஒரு வாக்கியம் எழுதுக :— 15

(1) குடும்பினுர், (2) அபுல்பாஸல். (3) பீஷ்வாக்கள், (4) நிரந்தர நிலவரித் திட்டம், (5) பிண்டாரிகள்.

II. (1) கர்நாடக யுத்தங்களுக்குப் பொதுவான காரணங்கள் யாவை? 12

(2) கடைசி மைசூர் யுத்தத்தின் பலன்கள் என்ன?

III. ராஜாராம் மோகன்ராய் என்பவர் செய்த சீர்த்திருத்தங்கள் எவை? 13

### பூமி சாஸ்திரம்

IV. இந்தியாவில் நான்கு முக்கியமான துறைமுகங்களை எழுதி, அவை ஒவ்வொன்றிலுமிருந்து ஏற்றுமதியாகிற ஒரு முக்கியமான சரக்கையும் குறிக்க. 12

V. பின்வரும் ஒவ்வொன்றின் விசேஷத்தைக் குறித்து ஒவ்வொரு வாக்கியமெழுதுக .— 12

(1) அஹமதாபாத், (2) பாகு (Baku), (3) பனமா கால்வாய், (4) சூர் பள்ளத் தாக்கு, (5) ஜிப்ரால்டர். (6) கிம்பர்லி.

VI, பின்வருவனவற்றிற்குக் காரணங்கள் கூறுக :— 16
(1) ஸ்வீடன் தீக்குச்சிகளுக்குப் பேர்பெற்றது.
(2) மத்திய ஆசியாவில் ஜனத்தொகை மிகவும் சொற்பம்.
(3) எகிப்து தேசம் மிக செழிப்புள்ளது.
(4) நியூ பவுண்லாண்டில் மீன் பிடித்தல் முக்கிய தொழில்.

### இராஜாங்க நூல்

VII. கிராமங்களில் ஒருவர் ஓய்வு நேரத்தைப் பிரயோஜனமாகக் கழிக்கக் கூடிய இரண்டு வழிகள் கூறுக. 8

VIII. உன் சுற்றுப்புறத்தின் சுகாதார நிலை, சுத்தம் இவற்றில் உன் அயலாருக்கு நீ செய்யவேண்டிய கடமைகள் யாவை? அல்லது உன் பொறுப்பென்ன? 12

Total ... 100

# 1944

## LANGUAGE—TAMIL.

*Time*—Two hours

மார்க்குகள்.

I. (a) திருக்குறள் யாரால் இயற்றப்பட்டது? 1+1
அதில் எத்தனை பாக்கள் உள்ளன? அதன் சிறப்பென்ன? 3

(b) "சிறப்புஞ் சீலமும் அல்லது பிறப்பு நலந் தருமோ, பேதையீரே!"—சிறப்புஞ் சீலமும் பெறக் கபிலர் கூறிய மொழிகள் என்ன 4

(c) சத்தி முற்றப்புலவர் நாரையை எவ்வாறு வர்ணித்துள்ளாரென்பதை வசனத்தில் எழுதுக. 3

(d) "கல்வியிங் கெமக்கேன்" என்று எல்லன் ஏன் சொன்னான்? 2

(e) கற்றறிவில்லா மாந்தரை தேசிகன் யாருக்கு உவமை கூறினன்? 2

II. (a) பதவுரை கூறுக :— 8

"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும்பாம்பெனஉயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம்."

(b) "வித்தையில்லாத மக்கள்" என்றது முதல் "மயக்கம் அன்றே" என்பது முடிய அடி பிறழாமல் எழுதுக. 6

III. (a) ஏரிக்குள்ளிருக்கும் குதிரையைப் பிடிக்க பரமார்த்தகுரு, சீடர், மிலேச்சன் செய்த ஆலோசனைகள் என்ன? 10

அல்லது

அதிகாரிகளின் கடமையைப்பற்றி உத்தியோக மமதையடைந்த கர்விக்கு என்ன புத்திமதி கூறப்பட்டது?

(b) இந்தியச் சிறுவர்கள் ஜப்பானைப்போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று விவேகானந்தர் ஏன் நினைத்தார்? (பத்து வரிக்குள்) 10

IV. (a) சந்தர்ப்பங் கூறுக :—

(i) "இங்கு காக்கையேனும் கொக்கேனும் இல்லை." 4

(ii) "இனிப்பிறவாமை வேண்டும்." 4

(iii) "சான்றோர் சினம் நீரிற் கிழித்த வடுப்போல் மாறுமன்றே." 4

(b) பொருள் கூறுக :— 8

மவுட்டியம், வெள்கி, புரவலன், பொலிவு, பனுவல், மேதி, மாசற்ற, உவந்து.

V. கோடிட்டவற்றிற்கு இலக்கணம் கூறுக :—

(i) உயிர் கொடுத்தவனை உலகம் போற்றும். 3

(ii) ஓடிய நரிகளில் ஒரு நரி திரும்பிப் பார்த்துச் சிரித்தது.

(iii) பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய். 4

VI. கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 20

ஒரு பக்கத்துக்குள் வியாசம் எழுதுக :—

(i) நவீன யுத்த முறைகள்.

(ii) நீ பார்த்த விசேஷ ஸ்தலம்.

(iii) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

மொத்தம் ... 100

## ELEMENTARY MATHEMATICS

*Time*—Two hours

[குறிப்பு :—எல்லாக் கணக்குகளையும் செய்யவேண்டும். கேள்வி ஒவ்வொன்றிற்கும் மார்க்குகள் 10.]

I. (1) கடல் மட்டத்திற்கு மேல் 12,729 அடி உயரத்தில் அமர்நாத் இருக்கிறது. இது கடல் மட்டத்திலிருந்து $2\frac{1}{2}$ மைல் உயரத்திற்கு மேற்பட்டதா?

(2) ஒரு மைல் ரஸ்தாவைச் செப்பனிட ரூ. 400 செலவாகுமானால், 3 மைல் 7 பர். 110 கெ. நீளமுள்ள ரஸ்தாவைச் செப்பனிட எவ்வளவு செலவாகும்?

II. கீழ் வருவனவற்றில் காலியிடங்களை நிரப்புக :—

(1) 2 அ. 8 பை : ரூ. 1 = 1 : ——.

(2) அளவு விகிதப்படி (ஸ்கேல்) வரைந்த ஒரு படத்தில்—1 அங். = 200 அடி. ஃ 1 சதுர அங்குலம் = ——.

III. பின் வருவன சரி அல்லது பிழை என்று காரணங்களுடன் கூறுக :—

(1) ரூபாய்க்கு 9 பை வீதம் ரூ. 3,330-க்கு வருமான வரி ரூ. 149-2-0.

(2) 1 நி. 30 செக்கண்டுக்கு 2 மைல் செல்வதைவிட, மணிக்கு 60 மைல் வேகம் அதிக விரைவு.

IV. சென்ற வருடத்தில் ஓர் இடத்தில் 333 அங்குலம் மழை பெய்தது. இதில் மூன்று நாட்களில் பெய்த மழையின் அளவு 22 அங். அவ்வருஷத்தின் மீதிப்பாகத்தில் பெய்த மழையின் தின சராசரி அளவு என்ன? அங்குலத்தில் இரண்டாவது தசாம்ச ஸ்தானம் வரை துல்லியமாக விடை எழுதுக.

V. 420 அடி நீளம் 300 அடி அகலமுள்ள நீண்ட சதுர வடிவமான நிலத்தை ரூ. 25,000-க்கு வாங்கி, அதை ஒரு சதுர கெஜம் ரூ. 10 வீதம் விற்றால், லாபம் என்ன?

VI. ஒரு கனகெஜக் குழி வெட்ட 6 அ. 3 பை செலவாகு மென்ருல், 20 அடி நீளம் 18 அடி அகலம் 15 அடி ஆழம் உள்ள ஒரு குழி வெட்ட எவ்வளவு செலவாகும்?

VII. ஒரு தொழிற்சாலையில் வேலைக்காக மனுச் செய்த 4,920 பேரில் 87½ சத விகிதம் தெரிந்தெடுக்கப்பட்டனர். தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்.

VIII. ஒரு பாங்கியில் கடனுக எடுக்கப்பட்ட தொகை ரூ. 750. அதற்கு விதிக்கப்பட்ட அரை வருஷ வட்டி ரூ. 22-8-0 அப்படியானல் ரூ. 100-க்கு மாத வட்டி என்ன?

IX. ஒருவன் ரூ. 5,750 உம், மற்ருெருவன் ரூ. 6,250-உம் ஆக முதல் போட்டு இருவர் கூட்டு வியாபாரம் நடத்துகிருர்கள். அவர்களுக்கு ஒரு வருஷத்தில் கிடைத்த மொத்த லாபம் ரூ. 2,400. அந்த லாபத்தை அவ்விருவருக்கும், அவரவர் முதலுக்குத் தக்கபடி பங்கிடுக.

X. ஒரு முக்கோண வடிவமுள்ள வயலின் தென்வடல் வரப்பின் நீளம் 150 அடி. இதை அடுத்துச் சார்ந்துள்ள கிழமேல் வரப்பின் நீளம் 200 அடி. அவ்வயலின் படத்தை அளவு விகிதப்படி (scale) வரைந்து, (1) மூன்ருவது வரப்பின் நீளத்தையும், (2) இவ்வரப்பிற்கும் மற்ற வரப்புகளுள் ஏதாவது ஒன்றிற்கும் இடையில் உள்ள கோணத்தின் அளவையும் கண்டுபிடி.

## HISTORY, GEOGRAPHY, AND CIVICS.

*Time*—Two hours.

### சரித்திரம்

மார்க்குகள்.

I. (a) இப்போது புத்த மதத்தினர் எந்த தேசங்களில் காணப்படுகின்றனர்? 4

(b) அசோகர் பெற்ற ஒரே ஒரு வெற்றி யாது? அவர் ஆட்சியில் ஏன் யுத்தங்கள் இல்லை?

II. (a) தென் இந்தியாவில் மூன்று தமிழ் இராஜ்யங்களின் பெயர்களையும் அவைகளின் தலைநகரங்களையும் கூறுக. 8

(b) ஆந்திர இராஜ்யத்தின் எல்லைகள் யாவை?

III. (a) இராஜ புத்திரர்களோடு ஔரங்கசீப் யுத்தங்கள் தொடுக்கக் காரணம் யாது? 6

(b) இராஜபுத்திர குணத்தின் விசேஷ அம்சங்கள் யாவை?

IV. பெயர்களைக் கூறுக :— 3

(1) சிம்மாசனத்தில் வீற்றிருந்த ஒரே ஒரு முகம்மதிய இராணி; (2) குப்த அரசர்களில் மிகப் பெரியவர்? (3) விஜயநகர அரசர்களில் மிகக் கீர்த்தி வாய்ந்தவர்.

V. இந்தியாவிற்கும் மேல்நாடுகளுக்கும் உள்ள பழைய வியாபார தரைமார்க்கங்கள் யாவை? ஏன் புதியமார்க்கம் தேவையாயிருந்தது? 6

VI. (a) எவ்விதமான சந்தர்ப்பங்கள் மஹாராஷ்டிர அதிகாரம் எழும்புவதற்கு உதவியாயிருந்தன? 8

(b) கர்நாடக யுத்தங்களுக்குப் பொதுவான காரணங்கள் யாவை?

VII. கீழ்க்கண்ட ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு வரி எழுதுக :— 5

(1) மெகாஸ்தனிஸ், (2) சாணக்கியர், (3) ஸெல்யூகஸ், (4) ஸர் தாமஸ்ரோ, (5) தோடர்மால்.

## பூமி சாஸ்திரம்

VIII. கீழ்க்கண்டவைகளுக்குக் காரணங்கள் கூறுக :— 9

(1) ஆர்க்டிக் பிரதேசங்கள் மிகவும் குளிர்ச்சியாய் இருக்கின்றன.

(2) பெங்களூரும் சென்னையும் ஒரே அக்ஷரேகையில் இருந்தபோதிலும், பெங்களூர் சென்னையைக் காட்டிலும் அதிக குளிர்ச்சியாயிருக்கிறது.

(3) வங்காளத்தில் ஜனநெருக்கம் அதிகம்.

IX. கீழ்க்கண்டவை எந்த தேசங்களிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படுகின்றன?— 5

சர்க்கரை, காகிதம், பெட்ரோல் (petrol), கம்பளி சாமான்கள், பட்டு.

X. கீழ்க்கண்ட ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியத்தில் விவரிக்கவும் :— 10

டெல்டா (delta), கிளேசியர் (glacier), ஓயஸிஸ் (oasis), ஸ்டெப்ஸ் (steppes), எரிமலை.

XI. தேயிலையும் பருத்தியும் வளர்வதற்கு ஏதுவான சாதகங்கள் யாவை? இவை ஒவ்வொன்றும் ஏராளமாகப் பயிரிடப்படும் ஒரு பிரதேசத்தைக் கூறுக. 6

XII. இந்தியாவில் உள்ள ஏதாம் இரண்டு பெரிய நீர்ப்பாசன திட்டங்களைக் கூறுக. 4

XIII. கீழ்க்கண்ட இடங்களில் உள்ள மனிதரின் முக்கியத் தொழில்கள் யாவை?— 6

(1) மன்ஞ்சூரியா, (2) அரேபியா, (3) தென் ஆஸ்திரேலியா.

## இராஜாங்க நூல்.

XIV. நாம் வரிகள் ஏன் செலுத்தவேண்டும்? உனக்குத் தெரிந்த இரண்டு வரிகளைக் கூறுக. 5

XV. கிராம பஞ்சாயத்தின் வேலைகள் எவை? 5

XVI. கூட்டுறவு சங்கங்களின் நோக்கங்கள் யாவை? 5

XVII. மயக்கத்திற்கு, அல்லது முன்னங்கை எலும்பு முறிந்ததற்கு, நீ என்ன முதலுதவி செய்வாய்? 5

மொத்தம் ... 100

# 1945

## LANGUAGE—TAMIL

*Time*—Two hours

மார்க்குகள்.

I. (a) இராமலிங்க சுவாமிகள் தான் செய்த பிரசங்கங்களிலும், இயற்றிய பாடல்களிலும் என்ன போதித்து வந்தார்? 3

(b) "நாரை விடு தூது" பாடியது யார்? இச் செய்யுளைப் பாடியவரின் வறுமை எவ்வாறு நீங்கிற்று? 1 + 4

(c) இராம நாடகக் கீர்த்தனைகளின் தன்மை என்ன? உன் பாடத்தில் உள்ள கீர்த்தனைகள் எக்காண்டத்தில் உள்ளன? 2+1

ஸ்ரீ அருணாசலக் கவிராயர் தன் ஒழிவு நேரத்தை எப்படிக் கழித்தார்? 2

II. (a) கருத்தை விளக்கிக் கூறுக:—

(i) தன்னெஞ்சறிவது பொய்யற்க ; பொய்த்தபின் 3
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(ii) "மன்னிய உயிர்கள் தம்முள் மானிடன் சிறந்து சிற்றல் 3
அன்னவன் அரிதிற்கொண்ட அறிவினுலன்றே ஐயா !"

(b) அடிபிறழாமல் எழுதுக :— 8
"குலமும் ஒன்றே" என்றது முதல்
"பேதையீரே" என்பது முடிய.

III. (a) "ஆசன சேதம் ஜீவன் நாசம்" என்ற 7
வசனத்தைப் பரமார்த்தகுரு நம்பும்படி
நேர்ந்த சம்பவங்களில் ஒன்றைச் சுருக்க
மாகக் கூறுக.

(b) பரமார்த்த குருவின் கதையினுல் நீ தெரிந்து 2
கொண்ட நீதி என்ன ?

(c) "தன்குல விதிப்படி சொற்ப காலத்தில் 4
அழுத்தமும், அழகுங் கூடிய செருப்பைத்
தைக்கும் சக்கிலி, சாரமற்ற விஷயங்களைப்
பேசித்திரியும் உயர்குலத்தோனைக் காட்
டிலும் மேலானவனுவான்"—இதன் கருத்
தென்ன ?

IV. (a) கூடை பின்னி விற்கும் ஏழையைத் துன்புறுத் 7
திய பிரபுவுக்கு ஞானேதயம் எப்படி
உண்டாயிற்று ?

(b) புனிதவதியாரைத் தன் கணவன் ஏன் பிரிந்து 5
வாழத் துணிந்தான் ?

(c) செருக்கடைந்த குலேச பாண்டியனை இடைக் 4
காடனுர் எவ்வெவற்றிக்கு ஒப்பிட்டார் ?

V. (a) கீழ்க்கண்டவை யார், எப்பொழுது, யாரிடத்
தில் கூறியது ?—

(i) "ஒரு சாண்தான் வித்யாசம்" 4

(ii) "தீமை கலவாத நன்மையும், கசப்புக் 4
கலவாத இனிப்பும், துக்கம் கலவாத சந்
தோஷமும் இங்கே கிடைக்கமாட்டா."

(iii) "தமிழ்ச் சுவையை அறியமாட்டாத இம் 4
மன்னவன் கல்வியும் ஒரு கல்வியோ ?"

(b) (i) தடித்த எழுத்துள்ள பதங்களுக்குச் சொல்
லிலக்கணங் கூறுக :— 9

இடைக்காடனுருக்குச் சங்கப்பலகை இடம் கொடுத்தது.

(ii) பரமதத்தனிடம் வந்தவர்கள் இரண்டு மாம்பழம் கொடுத்தனர். அவைகளை வாங்கிக்கொண்டு அவர்களின் கருத்தை முடித்தான். பழங்களை மனைவியிடம் அனுப்பினான்—இவ்வாக்கியத்தில் உள்ள முற்றுக்களை எச்சங்களாக மாற்றி எழுதுக. 3

VI. கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றினைப்பற்றி ஒரு பக்கத்தினுள் கட்டுரை எழுதுக :— 20

(1) நீ செய்த ஒரு பிரயாணம்.

(2) நீ பார்த்த ஒரு சந்தை அல்லது கடைத்தெரு.

(3) நீ கண்ட ஒரு போட்டி விளையாட்டு அல்லது பந்தயம்.

மொத்தம் ... 100

## ELEMENTARY MATHEMATICS

*Time*—Two hours

[குறிப்பு :—எல்லாக் கேள்விகளுக்கும் விடை கொடுக்கவும். ஒவ்வொரு கேள்விக்கும் மார்க்கு 10]

I. (1) சவரன் ஒன்றுக்கு ரூ. 45-12-0 வீதம் ரூ. 350-க்கு எத்தனை சவரன்கள் வாங்கலாம் என்று உத்தேசமாகக் கண்டுபிடி. கணித்துப் பார்த்த முறையைக் காட்டு.

(2) ஒரு புகைவண்டி இரவு 8–15 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டு அன்றிரவே 1-16 மணிக்கு ஜோலார்பேட்டை வந்து சேருகிறது. இப்பிரயாணத்திற்கு எவ்வளவு நேரம் ஆகிறது?

II. கீழ்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்க :—

(1) 39·37-இல் இருந்து 39370 கிடைக்க ——ஐக் கொண்டு பெருக்கவும், 39·37-இல் இருந்து ·3937 கிடைக்க——ஐக்கொண்டு வகுக்கவும்வேண்டும்.

(2) 9 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் வாரத்திற்கு 189 தனியளவுகள் (units) அரிசிப் பங்கீடு பெற்றால், 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ——தனிஅளவு அரிசிப்பங்கீடு கிடைக்கும்.

III. ஓரிடத்திலிருந்து குறிப்பிட்ட வேறோரிடத்திற்குப் போக 3-வது வகுப்பு ரயில்வே டிக்கெட்டு 3 அணா 3 பை. ஒரு

மாதத்திற்கு ரூ. 5–2–0 கொடுத்து ஒரு பாஸ் எடுத்துக் கொண்டால், இவ்விரண்டிடங்களுக்கு மிடையே பல பிரயாணங்கள் செய்யலாம். ஒரு நாளில் இரண்டு தடவையாக 24 நாள் பிரயாணம் செய்யும் ஒரு மாணவன் அந்த பாஸ் வாங்குவதால் அடையும் லாபம் என்ன ?

IV. ஒருவன் கீழ்க்கண்டவாறு பலரகக் காக்கித் துணிகளை விலைக்கு வாங்கினான் :—$1\frac{3}{4}$ கெஜம் 9 அணா விற்கும், $2\frac{1}{4}$ கெஜம் 12 அணாவிற்கும், $2\frac{1}{2}$ கெஜம் 13 அணாவிற்கும், $1\frac{1}{2}$ கெஜம் 8 அணாவிற்குமாக. ஒரு கெஜத்தின் சராசரி விலை கண்டுபிடி.

V. ஒரு கன அடி பரிமாணம் $6\frac{1}{4}$ காலன் கொள்ளுமானால் 6 அடி நீளம், 4 அடி அகலம், 3 அடி உயரம் உள்ள ஒரு தொட்டி எத்தனை காலன்கள் கொள்ளும் ?

VI. ஒருவன் 115 கெஜம் நீளம், 44 கெஜம் அகலம் உள்ள நிலத்தை ஏக்கர் ரூ. 2,000 வீதம் வாங்கி, 420 சதுர கெஜ நிலத்தைப். பாதைக்கென்று ஒதுக்கிவிட்டு, மீதிப் பாகத்தை வீட்டடி நிலங்களாகப் பிரித்து 2,400 சதுர அடிகொண்ட ஒவ்வொரு பகுதியையும் ரூ. 150-க்கு விற்றால், அவன் அடையும் லாபம் என்ன ?

VII. ரூ. 100-க்கு வாங்கப்பட்ட ஒரு தேசியச் சேமிப்புப் பத்திரத்திற்கு 12 வருஷங்களுக்குப்பின் ரூ. 150 கிடைக்கும். கொடுக்கப்படும் தனி வட்டி விகிதம் என்ன ?

VIII. ஒரு ஜோடி பாதரட்சையின் விற்கும் விலை ரூ. 7–8–0 என்று குறிப்பிட்டால், ஒரு வியாபாரி 25% லாபம் பெறலாம் என்று எதிர்பார்க்கிறான். அவன் அதை ரூ. 6–12–0-க்கு விற்றால் அவன் பெறும் லாபத்தின் சத விகிதம் என்ன ?

IX. ஒரு பால் வியாபாரி நீரையும் பாலையும் சம அளவிற் கலந்து 3 படி தயாரிக்கிறான். இதில் ஒரு படியை விற்றபிறகு திரும்பவும் தண்ணீர் சேர்த்து 3 படி ஆக்கிக் கொள்கிறான். இக் கலவையிலுள்ள தண்ணீர் எவ்வளவு ? பால் எவ்வளவு ?

X. முக்கோணவடிவமான ஒரு வயலின் ஒரு மூலையிலிருந்து இரண்டாவது மூலை 180 கெஜம் நேர் வடக்கிலும், மூன்றாவது மூலை முதல் மூலைக்கு நேர் மேற்கில் 240 கெஜ தூரத்திலும் இருக்கின்றன. ஸ்கேல்படி படம் வரைந்து பின் வேண்டுவனவற்றைக் கண்டுபிடி :—

(1) இரண்டாம் மூன்றும் மூலைகளுக்கிடையில் உள்ள பக்கத்தின் தூரம்.

(2) இந்தப் பக்கம் மற்றப் பக்கங்களோடு சேருவதனால் உண்டாகும் கோணங்களின் அளவு.

# HISTORY, GEOGRAPHY AND CIVICS

*Time*—Two hours

மார்க்குகள்

## HISTORY

I. (a) இரண்டாம் தானேஸ்வரச் சண்டையின் முக்கியத்தை ஒரு வாக்கியத்தில் எழுதுக. 2

(b) கீழ்க்கண்டவற்றில் ஒவ்வொன்றைப்பற்றியும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்கள் எழுதுக :— 10

(1) மாலிக்காபர், (2) தலைக்கோட்டை, தாஜ் மஹால், (4) பாரசீகத்தின் நாதர்ஷா, (5) லாப்ஸ் என்னும் கொள்கை (doctrine of lapse).

II. (a) அக்பர் சமஸ்தானத்திலுள்ள மூன்று பிரக்கியாதி பெற்றவர்களின் பெயர்களைக் கூறுக. அவர்கள் ஒவ்வொருவரும் எதில் பிரக்கியாதி பெற்றவரென்று ஒரு வாக்கியத்தில் எழுதுக. 6

(b) பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்தியாவில் சொந்தமான மூன்று இடங்களைக் கூறுக. 3

III. (a) துணைப்படை தந்து தலைமைபெற்ற ஏற்பாட்டின் (system of subsidiary alliances) முக்கிய அம்சங்கள் எவை? 5

(b) வில்லியம் பெண்டிங்க் பிரபுவின் முக்கிய நிர்வாக சீர்திருத்தங்களைக் கூறுக. 5

IV. இரண்டாவது சீக் யுத்தத்தின் இரண்டு முக்கிய சண்டைகள் எவை? 4

V. செம்ஸ்போர்டு பிரபு வைசிராயாயிருந்த காலத்தில் மாகாண அரசாட்சியில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை? 5

## GEOGRAPHY

VI. (a) அஸ்ஸாமில் அதிக மழையும், ராஜபுதனத்தில் சொற்ப மழையும் இருப்பது ஏன்? காரணங்களைக் கூறுக. 4

(b) கீழ்க்கண்டவை எவை? அவை எதற்குப் பேர் போனவை?— 6

(1) மான்செஸ்டர், (2) ஏடன், (3) கோலார்.

VII. அணைக்கட்டு என்றால் என்ன? மூன்று முக்கிய அணைக்கட்டுகளின் பெயர்களைக் கூறி, அவை எங்கு இருக்கின்றனவென்று குறிப்பிடுக. 6

VIII. கீழ் வருவனவற்றில் ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியம் எழுதுக :— 10

(1) தண்டரா, (2) பிரைரீஸ், (3) ரூர் பள்ளத் தாக்கு, (4) சூயஸ் கால்வாய், (5) ஜிப்ரால்டர்.

IX. சீனுவின் மூன்று முக்கிய நதிகளையும், அவை சங்கமமாகும் கடல்கள் அல்லது சமுத்திரங்களையும் கூறுக. 6

X. (1) ஆர்க்டிக், அண்டார்க்டிக் வட்டங்கள், (2) பூமத்திய ரேகை, (3) உஷ்ண மண்டலம்—இவைகளைக் காட்ட ஒரு படம் வரைக. 8

## CIVICS

XI. (a) பாதுகாப்பு சேனையின் மூன்று முக்கிய கிளை ஸ்தாபனங்களைக் கூறுக. 3

(b) ஒரு குழந்தையின் ஆடைகள் தீப்பற்றிக் கொண்டால், நீ என்ன செய்வாய்? நெருப்பினுல் உண்டான புண்களுக்கு நீ என்ன முதலுதவி செய்வாய்? 2

XII. கிராமவாசிகளுக்குத் தகுந்த லாபகரமான உப தொழில்கள் சிலவற்றைக் கூறுக. 5

XIII. (a) சம உணவு (balanced diet) என்ருல் என்ன? 4

(b) (1) பால், (2) கோதுமை, (3) பழங்கள்—இவற்றின் உணவுக் குணங்கள் என்ன? 6

மொத்தம்....100

## ENGLISH—OPTIONAL

*Time*—Two hours — Marks

I. Answer *any five* of the following :— 15

(*a*) How do mosquitoes spread fever?

(*b*) Give six reasons why boys should not wear ear-rings.

(*c*) How did the farmers kill the white moths?

(*d*) How did the fisherman get the dishonest door-keeper punished?

(*e*) How do goats Prevent new trees growing?

(*f*) What are the friends of consumption?

(*g*) What did the Lambardar expect children to learn at school?

(*h*) Why did the leader of the cattle-lifters give up cattle-lifting?

II. (*a*) Quote, in verse form, the *eight lines* beginning with "I hear the songs......" 8

(*b*) Explain : (1) He saw the cheat outwit the fool. 6

(2) He saw that love can conquer all And make a palace of a stall.

(*c*) How did the king rule after he went back from his wandering through the city? 3

(*d*) What does God send over the land sown with seed? 5

III. Write, in your own words, in not more then a page, the story of the honest woodcutter. 13

IV. (*a*) Use *any five* of the following phrases in sentences of your own : 10

A lot of ; at least ; for a while ; instead of ; so that ; make the best use of ; put an end to ; insist on.

(*b*) Fill up the blanks :— 5

(1) No sooner had he said this—Varuna again vanished below the surface of the water.

(2) The summer monsoon is important not only for lessening the heat — — for giving us food.

(3) I agree — you ; many will agree — your proposal.

(c) Rewrite the followig as directed :— 10

(1) Thus the mosquito passes on the fever. (change the voice.)

(2) "Do not make so much noise," said the door-keeper. (In indirect speech.)

(3) You cannot go in unless you agree to what I say. (Remove the negative.)

(4) Empty them all once a week. (In interrogative form.)

(5) All young boys should play and enjoy themselves if they wish to grow up healthy and strong. (In singular form.)

V. Write a short letter to a friend asking him to spend his holidays with you *or* to attend a marriage in your house. 15

VI. (a) Point out the principal and the subordinate clauses in the following sentence:— 4
*Some* hills are covered *with* grass *and* trees *which* protect *the* soil from the *force* of the rain.

(*b*) Name the parts of speech of the words italicized in the above sentence. 6

Total ... 100

# 1946

## LANGUAGE—TAMIL

*Time*—Two hours

மார்க்குகள்

I. (1) 'திருக்குறள்' என்ற நூலுக்கு இப்பெயர் வரக் காரணமென்ன? இந்நூல் எதை விளக்குகின்றது? 1+2

(2) 'அரியது கேட்கில்' என்று தொடங்கும் பாடலை இயற்றியது யார்? இப்பாடல் எதை அறிவுறுத்துகிறது? 2+2

(3) தாயுமான சுவாமிகளின் பாடல்கள் எத்தன்மையவை? 'பராபரக் கண்ணி' என்றால் என்ன? 1+1

(4) திரு. தேசிகவிநாயகம் பிள்ளை எவ்வகைப் பாடல்கள் இயற்றுவதில் திறமை வாய்ந்தவர்? 2

II. (1) கருத்தை விளக்குக :— 4
அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(2) பதவுரை கூறுக :— 5
எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

(3) அடி பிறழாமல் எழுதுக :— 6
'வந்தவிவ காரத்தில்' என்றது முதல் 'மலைமேவு குமரேசனே' என்பது முடிய.

(4) தில்லை நடராசரைத் தரிசித்த நந்தனர் தாம் அடைந்த சந்தோஷத்தை எப்படி வெளிப்படுத்திஞர்? அவர் எவ்வாறு தரிசனம் செய்தார்? 2+2

III. (1) அவிவேகபூரண குருவும் அவருடைய சீடர்களும் ஆற்றைக் கடந்ததும் விசனமடையக் காரணமென்ன? பின்னர் எவ்வாறு தெளிந்தனர்? 3+3

(2) செய்யத்தகாத வழிகளில் செய்யக்கூடிய தருமங்களில் இரண்டைக் கூறுக. 2

(3) 'தும்' என்ற சொல் உலக வழக்கிலுள்ளது என்று ஒட்டக்கூத்தருக்கு எவ்வாறு உணர்த்தப்பட்டது? 5

IV. (1) பிம்பிசாரனுடைய யாகசாலையில் சித்தார்த்தர் கூறிய அறவுரைகளைச் சுருக்கமாகக் கூறுக. 8

(2) நீர்மூழ்குவோன் கடலினுள் வேலை முடிந்தவுடன் ஏன் திடீரென்று நீர் மட்டத்திற்கு வரக்கூடாது? 8

V. (1) பொருள் கூறுக :— 3

ஏகாக்ரசித்தம், விழுப்பம், ஆகுலம், ஏமாப்பு, செம்மாந்து, அணிமொழி.

(2) கீழ்க்கண்டவைகட்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக. 6

(i) ஆண்டவனுடைய அருள் மாத்திரம் இருக்கும் பட்சத்தில் ஊமை பேசுவான், நொண்டி பெரிய மலைகளையும் தாண்டுவான்.

(ii) இது இம்மை மறுமைப் பயன்களைத் தராத வீண்கதையாயின், அவ்விரு பயனுமுடையதாகிய நற்கதை யாது?

(iii) என் ஸ்திதியைக் கண்டு பிரதிபலனைக் கருதாது எனக்குதவிய நீயே உயர்குடியிற் பிறந்தவன்.

(3) கோடிட்டவற்றிற்குச் சொல்லிலக்கணம் கூறுக :— 9

பிறவிப்பிணியைத் தீர்க்க நான் மருந்தொன்றும் கண்டேனில்லை.

(4) | இவ்வகைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக :— 3

அக்காவலனே | பந்து இடது புறம் வருமோ | வலது புறம் வருமோ வென்றறியாது குனிந்து நின்று | முன்னும் பின்னும் நடனம் செய்தான் | எவ்வளவு எளிதாக மீட்சிபுரத் தலைவன் தன் பள்ளிக்கூடத்திற்கு வெற்றியும் புகழும் கொண்டு வரக்கூடும் | அவன் நினைத்தபடி செய்வதற்குத் தடை யாது |

VI. கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் வியாசம் எழுதுக :— 20

(1) சமாசார பத்திரிகைகள்.

(2) திருவிழா அல்லது பண்டிகை.

(3) பள்ளிக்கூட விழா அல்லது கொண்டாட்டம்.

மொத்தம் ... 100

சென்னை-600 008.

## ELEMENTARY MATHEMATICS

*Time*—Two hours

மார்க்குகள்.

I. (a) ஒரு அறையின் நீளத்தையும, அதன் அகலத்தையும் பாதியாக்கிவிட்டால், அவ்வறையின் விஸ்தீரணம் என்னவாகும்? 10

(d) ஒரு பையனுடைய வயது 7. அவன் தகப்பனுக்கு வயது அதைப்போல் 5 மடங்கு. மகனுக்குத் தற்போதைய வயதைப்போல் இருமடங்கு ஆகும்போது, தந்தையின் வயது என்ன?

II. ஒரு வியாபாரி $2\frac{1}{4}$ பவுண்டு காப்பித்தூள் ரூ. 3-10-6 பைசாவுக்கும், $3\frac{1}{2}$ பவுண்டு ரூ. 5-7-6 பைசாவுக்கும், $1\frac{3}{4}$ பவுண்டு ரூ. 1-15 6 பைசாவுக்கும், $2\frac{1}{2}$ பவுண்டு ரூ. 3-14-6 பைசாவுக்கும் வாங்கி, எல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்துவிட்டான். ஒரு பவுண்டு தூளின் சராசரி கொள்விலை என்ன? 8

III. 70 கெஜம் குறுக்கு விட்ட அளவுள்ள ஒரு வட்ட நிலத்தைச் சுற்றி எத்தனை தடவை ஓடினல், ஒரு மைல் தூரம் ஆகும்? 8

IV. நீண்ட சதுர வடிவமான ஒரு நிலப்பகுதியின் நீளம் 70 அடி; அதன் அகலம் 60 அடி; அதனுட்புறத்தில் சுற்றிலும் $2\frac{1}{2}$ அடி அகலமுள்ள ஒரு பாதை செல்லுகிறது. ஒரு சதுர கெஜத்திற்கு 8 அணு வீதம் அப்பாதை முழுவதையும் அமைப்பதற்குச் செல்லும் தொகையைக் கண்டுபிடி. 10

V. ஒரு மனிதன் ரூ. 5,000-க்கு ஒரு வீடு வாங்கி, அதைப் பழுது பார்க்க ரூ 1,250 செலவிட்டான். அந்த வீட்டை மாதம் ரூ. 30 வாடகைக்கு விடுகிறுன். வீட்டு வாடகையிலிருந்து ரூ. 47-8-0 தீர்வைக்காகக் கொடுத்துவிடுகிறுன். அவன் போட்ட முதலுக்கு அவனுக்குக் கிடைக்கும் வருமானம் என்ன வட்டி வீதாச்சாரப்படி இருக்கிறது 10

VI. சரியான முறைப்படி ஒரு பட்டி தயார் செய்க :— 10
ஒன்று 2 அ. 3 பை வீதம் $3\frac{1}{2}$ டஜன் பென்சில்கள், டஜன் 10 அணு வீதம் $\frac{1}{2}$ குரோஸ் ரப்பர்த் துண்டுகள், குயர் 6 அ. 6 பை வீதம் 1 ரீம் வெள்ளைத்தாள், ஒன்று 15 அணு வீதம் 28 பாடப் புத்தகங்கள்.

VII. 2 : 3 விகிதத்தில் பாலும், நீரும் சேர்ந்த 15 படி கலப்புப் பாலோடு, 1 : 2 விகிதத்தில் நீரையும் பாலையும் சேர்த்து உண்டாக்கிய 9 படி கலப்புப்பால் சேர்க்கப்படுகிறது. இவ்விதம் சேர்க்கப்பட்ட கலப்பில், பாலும் நீரும், என்ன விகிதாம்சதத்தில் கலந்திருக்கிறது? 10

VIII. ஒரு பட்டணத்தின் ஜனத்தொகை 45,680. அவர்களில் 23,800 பெண்கள். மீதி ஆண்கள். பெண்களில் 2,856 பேரும், ஆண்களில் 3,282 பேரும் கற்றவர்கள். அப்பட்டணத்தில் ஆண்களிலும் பெண்களிலும் கல்லாதவர்களின் சதவிகிதத்தைக் கண்டுபிடி. 10

IX. வெள்ளியின் விலை 100 தோலாவுக்கு ரூ. 131-4 அணு. ஒரு வியாபாரி 75 தோலா நிறையுள்ள ஒரு வெள்ளித்தட்டைத் தோலாவுக்கு 2 அணு வீதம் செய்கூலியும் கொடுத்து வாங்குகிறுன். அத்தட்டை 5% லாபத்திற்கு விற்றுல், அவனுக்குக் கிடைக்கும் தொகை என்ன? 10

X. 13 அடி நீளமுள்ள ஒரு ஏணி செங்குத்தான ஒரு சுவர்மீது சார்த்தப்பட்டிருக்கிறது. ஏணியின் அடிப்பாகம், சுவரின் அடிப்பாகத்திலிருந்து 5 அடி தூரத்திலிருக்கும் போது ஏணியின் தலைப்பக்கம் சுவரின் உச்சியைத் தொடுகிறது. அளவு விகிதப் (ஸ்கேல்) படி ஒரு பிளான் வரைந்து, (a) சுவரின் உயரத்தையும், (b) சுவரோடு ஏணி பொருந்துமிடத்தில் உண்டாகும் கோணத்தையும் கணடுபிடி. 14

மொத்தம் — 100

## HISTORY, GEOGRAPHY, AND CIVICS.

*Time*—Two hours.

மார்க்குகள்.

I. ஒரு வார்த்தையில் விடை எழுது :— 10

(1) சூரியன் எத்தினத்தில் மகரரேகைக்கு நேர் உச்சியில் இருக்கும்?

(2) அமெசான் காட்டிலிருந்து நமக்குக் கிடைப்பது என்ன?

(3) கஸ்பியன் கடலில் சங்கமமாகும் ருஷிய நதி எது?

(4) தற்போதுள்ள இந்திய காரியதரிசி (Secretary of State for India) யார்?

(5) 1857-ல் நடந்த முக்கிய சம்பவம் என்ன?

(6) இப்போதுள்ள பிரதம தளபதியின் (Commander-in-chief) பெயர் என்ன?

(7) மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் எவ் வருஷத்தில் அமுலுக்கு வந்தன?

(8) விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் யார்?

(9) உலகத்தின் சர்க்கரையில் பெரும்பாகம் எங்கிருந்து கிடைக்கிறது?

(10) ஸ்தல சுய ஆட்சியை ஸ்தாபித்த கவர்னர் ஜெனரல் யார்?

II. இந்தியாவின் உருவப்படம் ஒன்று வரைந்து பின் வருபவற்றைக் குறிப்பிடுக:— 12

(1) மேற்குக் கரையிலுள்ள இரண்டு துறை முகப் பட்டணங்கள்.

(2) கிழக்குக் கரையிலுள்ள இரண்டு துறை முகப் பட்டணங்கள்.

(3) அரபிக் கடலில் சங்கமமாகும் இரண்டு நதிகள்.

(4) தெற்கிலுள்ள வளமான ஒரு விவசாயப் பிரதேசம்.

(5) ஒரு ஆலைத்தொழிற்(industrial) பிரதேசம்.

III. பின் வருபவைகளைப் பொருத்தி ஜதை ஜதையாய் எடுத்து எழுதுக:— 8

காலிபோர்னியா, வங்காளம், ஆஸ்திரேலியா, ஜப்பான், சணல், கங்காரு, விஜயநகர ராஜ்யம், பேர்ல் துறைமுகம் (Pearl Harbour), கலிங்கப் போர், பழப்பக்குவம், சீனு, எரிமலை, ஷாங்ஹை ஷேக், கிருஷ்ண தேவராயர், அசோகர், வெசூவியஸ்.

IV. பின் வருபவைகளுக்குக் காரணம் கூறுக:— 9

(1) மேற்குக் கரையில் அடர்த்தியான தாவரம் காணப்படுகிறது.

(2) ஆமதபாத்தில் ஏராளமான பருத்தி ஆலைகள் உண்டு.

(3) பசிபிக் சமுத்திரத்தில் தீவுகள் அதிகமாய் இருக்கின்றன.

V. (a) தென் சீனாவில் மிகுதியான பாகம் காடுகளால் நிறைந்திருப்பது ஏன்? 5

(b) ஜப்பான் ஏன் கச்சாப்பருத்தியை இறக்குமதி செய்து, கச்சாப் பட்டை ஏற்றுமதி செய்கிறது? 5

VI. பின்வரும் பொருள்கள் உலகத்தில் எப்பாகங்களில் அதிகமாய்க் கிடைக்கின்றன?— 8

(a) ரப்பர், (b) இரும்பு, (c) எண்ணெய் வித்துக்கள், (d) தேயிலை.

History

VII. நான்காம் மைசூர் யுத்தத்தின் பலாபலன்கள் என்ன? 9

VIII. சுருக்கக் குறிப்புகள் எழுதுக :— 9
(a) ராஜாராம் மோஹன்ராய், (b) பிந்தாரிகள், (c) ரயத்வாரி முறை.

IX. இரண்டாம் கர்நாடக யுத்தத்தின் காரணங்கள் எவை?

Civics

X. நான்கு வரிகளின் பெயரைக் கூறி ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுதுக. 8

XI. சுருக்கக் குறிப்புகள் எழுதுக :— 9

(1) வோட்டுரிமை, (2) செயற்கைச் சுவாசம் அளித்தல், (3) கூட்டுறவு சங்கங்களின் உபயோகம்.

மொத்தம் ... 100

ENGLISH—OPTIONAL

*Time*—Two hours. **Marks**

I. Write short answers to the following :— 15

(*a*) How can you prevent malarial fever from spreading in villages and towns?

(*b*) How is the summer monsoon useful to India?

(*c*) What happened to the caterpillars which Arjun put into his jar?

(*d*) What must you do to prevent cattle getting disease from the next village?

(*e*) How did Varuna punish the dishonest wood-cutter?

II. Quote in verse form the eight lines— 8
" We thank thee, then,...........thankful hearts."

III. (a) Give the meaning of the following lines in your own words:— 5

We plough the fields and scatter
The good seed on the land,
But it is fed and watered
By God's almighty hand.
He sends the snow in winter,
The warmth to swell the grain,
The breezes and the sunshine,
And soft refreshing rain.

(*b*) What did the elephant do when Porus fell down on the ground? 5

(*c*) What did the king see when he went out in a Sadhu's robe to see his subjects? 5

IV. Write in your own words, in not more than a page the story of the young man who get enlisted in the Prussian King's favourite regiment. 15

V. (*a*) Use the following in sentences of your own:— 10
Far and near; to find fault with; bent on; to get rid of; as far as.

(*b*) Fill in the blanks— 6

Instead — getting annoyed — your children — singing songs, you can point out — your neighbour the leader — the party and challenge your neighbour — produce such a boy.

(*c*) Rewrite as directed—

(1) A cow gives three seers of milk a day. (Change into the passive voice.) 2

(2) There is need for good sanitation. (Change into the interrogative form.) 2

(3) " What do you do when you tear your clothes, Pratab? " asked Socrates. 2

(Change into the indirect form of speech.)

VI. Write a letter to a friend telling him what you wish to do after passing your VIII Standard Examination. 15

VII. (*a*) Point out the principal and subordinate clauses in the following sentence :—

He went straight *to* the house of a *rich* man *as* he was sure that this man would be very glad to buy his *fish*. 6

(*b*) What parts of speech are the words italicised in the above sentence? 4

Total ... 100

# 1947

## LANGUAGE—TAMIL

*Time*—Two hours

மார்க்குகள்.

I. (1) "நாலடியார்" என்ற நூலுக்கு இப்பெயர் வரக் காரணம் என்ன? இந்நூலைப்பற்றி வழங்கும் வரலாறு என்ன? 1+3

(2) "கடவுளை அறிந்தவர்கள்" என்ற பாடலை இயற்றியவர் யார்? கடவுளை அறிந்தவர்கள் யாவர்? 1+2

(3) "குறவஞ்சி" என்றால் என்ன? இதில் அமைந்துள்ள உறுப்புக்கள் யாவை? 2+2

(4) "நீதிநெறி விளக்கம்" இயற்றியவர் யார்? இந்நூலை இயற்ற யாது காரணம்? 1+2

II. (1) பதவுரை கூறுக :— 5

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா ;—ஆங்கதுகொண்(டு)
ஊருமெறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

(2) கருத்து விளக்குக :— 5

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமேவரும்.

(3) அடிபிறழாமல் எழுதுக :— 6

'கருங்கண் தோகை' என்றது, முதல் 'அவை செய்யும் குணமே' என்றது வரையில்.

III. (1) காகத்தின் சொற்களை மான் கேளாததால் அதற்கு நேர்ந்த கெடுதி என்ன? அதினின்று எவ்வாறு தப்பித்துக்கொண்டது? 2+2

(2) "திருக்குறள் எச்சமயத்தினரும் விரும்பி ஏற்றுக் கொள்ளும் நூல்"—இது எவ்வாறு பொருந்தும்? 5

(3) மொஹெஞ்ஜோ-தாரோவில் வாழ்ந்துவந்த மக்கள் எவ்விதமான ஆடை ஆபரணங்கள் அணிந்திருந்தனர் என அறிகிறோம்? 4

IV. (1) சுற்றுப் பிரயாணம் செய்வதால் ஏற்படும் நன்மைகளின் ஏதேனும் இரண்டினைக் கூறுக. 4

(2) கோவலனைக் கொன்ற பாண்டியன் தன் பிழையை எவ்வாறு உணர்ந்தான்? 5

(3) சிவபெருமானுக்கும் பார்த்தனுக்கும் போர் நேரிடக் காரணமென்ன? 4

(4) நம் நாட்டில் தொழிற் பெருக்கத்துக்குத் தடையாயிருப்பது என்ன? 3

V. (1) பொருள் கூறுக:— 5

தியங்குதல், துலைநா அன்ன நடுநிலை, தவள மால்விடை, வன்மக்களியானை மன், சராசரங்கள்.

(2) கீழ்க்கண்டவைகளுக்குச் சந்தர்ப்பங் கூறி விளக்குக:—

(i) உன்னைப் பசுத்தோல் போர்த்த ஒரு புலி என்றே கருதுகிறேன். 3

(ii) உன்னை சோகவைத்த என் புன்மைக்காக வருந்தினேன். 3

(3) கீழ்க்கண்டவற்றைப் பிறைக் குறிகளுக்குள்ளே கண்டுள்ளபடி மாற்றி எழுதுக:—

(i) கற்பிற்கு அருங்கலமாய் விளங்கும் உன் மனைவியையா நீ கொலைபுரிவது? (சாதாரண வாக்கியமாக.) 2

(ii) தனஞ்செயன் வராகத்தின் முகத்தை நோக்கி ஒரு சுடுசரம் ஏவினான். (செயப்பாட்டு வினையாக.) 3

(4) கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை யிடுக:— 5

ஆனால் | முற்காலத்திற் செய்யப்பட்ட பிரயாணங்களுக்கும் | இக்காலத்திற் செய்யப்படும் பிரயாணங்களுக்கும் வேற்றுமையுண்டு | முற்காலத்தில் இரயில் வண்டிகள் இல்லை | மோட்டார்கள் இல்லை | ஆசாயக் கப்பல்கள் முயற்கொம்பே | ஆதலால் | அக்காலத்து மக்கள் பெரும்பாலும் நடந்தும் | சிறுபான்மை கட்டை வண்டி குதிரை இவற்றிலுமாகவே பிரயாணத்தை மேற்கொண்டார்கள் |

VI. ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் பின் வருபவைகளில் ஏதாம் ஒன்றைக் குறித்து வியாசம் எழுதுக :— 20

(1) உன் கிராமத்தில் கவனித்த ஒரு பிராணி அல்லது பக்ஷியின் பழக்க வழக்கங்கள்.

(2) வாசிக்கையில் உனக்கு அதிகம் இன்பம் அளித்த புஸ்தகம்.

(3) உன் கிராமத்தில் ஓர் மழை நாள்.

மொத்தம் ... 100

## ELEMENTARY MATHEMATICS

*Time*—Two hours

மார்க்குகள்.

I. ஒரு வேலையை 12 மணி நேரத்தில் A செய்வான் ; அதை 18 மணி நேரத்தில் B செய்வான். 12

(a) இருவரும் சேர்ந்து அவ்வேலையை எவ்வளவு நேரத்தில் செய்வார்கள் ?

(b) இருவரும் சேர்ந்து அவ்வேலையைத் தொடங்கி, 2 மணி நேரத்திற்குப்பிறகு B விலகிவிட்டானுகில், வேலையை முடிக்க A-க்கு எவ்வளவு நேரம் ஆகும் ?

II. (a) ஒரு அடிக்கோல் 4·5″ இடத்தில் முறிந்து விட்டது. பெரிய துண்டின் நீளம், சிறிய துண்டின் நீளத்திற்கு உள்ள விகிதம் (ratio) என்ன ? 4

(b) 35 சேர் கலப்புப் பாலில், பாலும் நீரும், 5 : 2 என்ற விகித (proportion) அளவில் உள்ளது. மற்றொரு 25 சேர் கலப்புப் பாலில் 10

4 : 1 அளவில் பாலும் நீரும் கலந்து உள்ளது. இவ்விரண்டு பாலையும் சேர்த்துக் கலந்த பிறகு அந்தக் கூட்டுப்பாலில் பாலும் நீரும் எந்த விகிதத்தில் இருக்கும் ?

III. ஒருவன் தன் சொத்தில் 40% தனது மகனுக்கும், 25% தனது மகளுக்கும், 20% தனது மனைவிக்கும், மிகுந்து உள்ளதைத் தருமத்திற்கும் கொடுத்தான். மகளைவிட மகனுக்கு அதிகமாகக் கிடைத்தது ரூ. 1,350 என்றால், சொத்து முழுவதும் எவ்வளவு? தருமத்திற்குக் கொடுபட்டது எவ்வளவு ? 10

IV. கீழே கொடுத்திருக்கும் அளவுகளைக்கொண்டு ABC முக்கோண வயலின் பிளான் (plan) வரைக. AB=600 லிங்குகள், AC=260 லிங்குகள், CB=430 லிங்குகள். 14

C-யிலிருந்து AB-க்குச் செங்குத்துக் கோட்டின் (perpendicular) நீளம் என்ன ?

அந்த வயலின் விஸ்தீரணத்தை ஏகராக்களில் கணக்கிட்டு எழுதுக.

(ஸ்கேல் 1 அங்குலம்=100 லிங்குகள்.)

V. $3\frac{1}{2}$% வட்டி கொடுக்கும் ஒரு பாங்கியில் அரை வருஷத்தில் ரூ. 21-14-0 வட்டி கிடைக்குமானால், பாங்கில் எவ்வளவு தொகை போடவேண்டும் ? 10

VI. 82·5 ரூபாயை ஒரு பையனுக்கு ·375 ரூபாய் வீதம் எத்தனை பையன்களுக்குக் கொடுக்கலாம் ? [தசாம்சத்திலேயே(decimals) கணக்கு வழி செய்யவும்.] 8

VII. (a) ஒரு parallelogram ஒரு tropezium தினின்று எவ்விதம் வித்தியாசப்படும் ? 4

(b) கோணங்களில் angel ஒன்றை 60° ஆக வைத்து ஏதேனும் ஒரு (parallelogram)வரைக. 6

VIII. 18″ நீளம், 15″ அகலம், 1 அடி உயரம் உள்ள நீண்ட சதுர வடிவமான ஒரு உலோகத்தொட்டி (rectangular metal cistern) 3 lb. கனமானது. அதில் ஜலம் நிரப்பிய பிறகு எவ்வளவு கனம் இருக்கும்? (ஒரு கன அடி ஜலம் $62\frac{1}{2}$ lb. எடையுள்ளது.) 12

XI. ஒரு பாடசாலையிலிருந்து 25 மாணவர்கள் கவர்ன்மெண்டு பரீட்சைக்கு ஆஜராயினர், கணக்குப் பாடத்தில் பாடசாலை சராசரி மார்க்கு 44. மூன்று மாணவர்களுக்கு 10

கிடைத்த மார்க்கு சைபர் (zero). அம்மூவர் பரீட்சைக்கு ஆஜர் ஆகாமல் இருந்தால் பாடசாலை சராசரி மார்க்கு எவ்வளவு அதிகம் ஆக இருக்கும்?

மொத்தம் ... 100

## HISTORY, GEOGRAPHY AND CIVICS

*Time*—Two hours.

மார்க்குகள்.

1. ஒரே வார்த்தையில் விடை எழுது :—
   - (1) வங்காளத்திற்கு எப்போது அதிக மழை கிடைக்கிறது? 1
   - (2) ப்யூஜியாமா எங்குள்ளது? 1
   - (3) ஆஸ்டிரியா, ஹங்கேரி நாடுகள் மூலமாய் ஓடும் நதி எது? 1
   - (4) "படகு நகரம்" என்பது எந்த சீன நகரத்தைக் குறிக்கும்? 1
   - (5) நியுபவுண்லாந்தின் முக்கிய கைத்தொழில் யாது? 1
   - (6) உலகத்தில் அதிகமாகச் சர்க்கரை கிடைக்கும் பிரதேசம் எது? 1
   - (7) மதராஸ் கல்வி இலாகா மந்திரி யார்? 1
   - (8) இந்திய மத்திய சர்க்காரின் இருப்பிடம் எது? 1
   - (9) "லாப்ஸ்" (Lapse) கொள்கையை எற்படுத்தியவர் யார்? 1
   - (10) லார்ட் பென்டிக் சமூக சீர்திருத்தங்கள் செய்ய அவருக்கு உதவியாக இருந்தவர் யார்? 1

II. கொடுக்கப்பட்டிருக்கும் உலகப் படத்தில் கீழ்க் கண்டவைகளைக் குறிப்பிடுக :— 12

பிரான்ஸ் தேசத்தின் தலை நகரம்? ட்ரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதை; ரூர் பள்ளத்தாக்கு; சஹாரா; கேப் காலனி; டில்லி; சிந்து பள்ளத்தாக்கு; ரோம்; கராச்சியிலிருந்து லண்டனுக்குச் செல்லும் ஆகாய மார்க்கம், அம்மார்க்கத்திலுள்ள விமான நிலையங்கள் மூன்று.

### சரித்திரம்

III. முதல் ஆப்கன் யுத்தத்தின் காரணங்கள் யாவை? 10

IV. கானிங் பிரபு செய்த சீர்திருத்தங்கள் யாவை? 10

V. சுருக்கமான குறிப்பு எழுது :— 9
(a) லார்ட் ரிப்பன், (b) ரயத்வாரி முறை (c) பிண்டாரிகள்.

### பூகோளம்

VI. உலகத்திலுள்ள நான்கு முக்கிய நதிகளை உதாரணமாகக்கொண்டு, நதிகள் மனிதனுக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விஸ்தரித்து எழுதுக? 10

VII. நாக்பூரின் சீதோஷ்ண நிலையை, சென்னை சீதோஷ்ண நிலையுடன் ஒப்பிட்டு, வித்தியாசத்திற்குக் காரணங்கள் காட்டுக. 10

VIII. இந்தியாவின் நான்கு முக்கிய கைத்தொழில்கள் யாவை? அவை எங்கு நடைபெறுகின்றன? ஏன்? காரணங்களுடன் விளக்குக. 10

### ஆட்சி நூல்

IX. கிராம பஞ்சாயத்து சபையின் வேலைகள் யாவை? அதன் வேலை திட்டத்தை விஸ்தரித்துக் கூறு. 10

X. சுருக்கமான குறிப்பு எழுது :— 9
(a) கூட்டுறவு, (b) இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், (c) பொது மராமத்து இலாகா.

மொத்தம் . .100

## ENGLISH (OPTIONAL)

*Time*—Two hours

Marks

I. Answer brifly *any five* of the following :— 15

(1) How are the great Indian rivers useful?

(2) What would happen to our world if there were no sun?

(3) When did the king begin to think of his people?
(4) On what does our health largely depend?
(5) How can a person attain peace?
(6) Why did the dwarf part from the giant?
(7) What were the last words of Admiral Nelson?
(8) How did Robinson Crusoe learn to burn his earthen pots?

II. (1) Give the meaning of the following lines:— 6+2

Thy mealy cap is worth my crown,—
Thy mill, my kingdom's fee!
Such men as thou are England's boast,—
O Miller of the Dee!

(2) Why did King Cophetua take the beggar-maid to be his queen? 5

(3) Quote the poem, "A faithful friend," preserving the verse form. 8

III. (a) Make sentences of your own with the phrases given below:— 12

To be proud of; on the other hand; to strike a bargain; at all costs.

(b) Rewrite as directed—

(i) The Prince helped Cindrella out of the coach. (Change the voice) 2

(ii) He knew his work and worked well and hard. (Use the present tense.) 2

(iii) "I wonder, child!" said his grandmother "why hunger and fear did not drive you home?" (In the indirect form of speech.) 4

IV. Narrate in your own words, in not more than a page— 15+3

How the British sailor was enabled to see his old mother.

*or*

How the poor boy got his employment with the farmer and became happy.

V. Write a letter to your sister not more than half a page telling her why you desire to join the Junior Red Cross Group in your school. 15+1

*or*

Write a letter to a friend not more than half a page giving an account of your visit to a weekly shandy.

VI. (a) Point out the principal and the subordinate clauses in the following sentence :— 6

One *of* his trusted servants produced a glass slipper and told the prince that it had slipped *off* the lady's foot as she was hurrying down the stairs.

(b) Name the parts of speech of the words italicized in the above sentence. 4

Total...100

# 1948

## LANGUAGE—TAMIL.

*Time*—Two hours.

[குறிப்பு :—உன் சொந்த மொழியில் தெளிவாக விடைகொடு.]

மார்க்குகள்

I. (1) அடி பிறழாமல் எழுதுக :— 6

"கேட்ட பொழுதில்" என்றது முதல் "வேறுளரோ" என்றது வரையில்.

(2) உரை நடையில் எழுதுக :— 4

யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் : யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்.

II. (1) "எல்லாம் இப்படிப் பல பேசும் ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே"—யார் எல்லாம்? எப்படிப் பல பேசுவார்கள்? 5

(2) தாய், தந்தை, மகன்—இவர்களின் கடமை என்னென்ன? 6

(3) இன்சொல், வன்சொல்—விளக்குக. 4

(4) திருக்குறளின் உட்பிரிவுகள் என்னென்ன? 4

(5) 'பழமொழி' இயற்றியவர் யார்? 1

எத்தனை வெண்பாக்கள் உள்ளன? 1
ஏன் அப்பெயர் அமைந்தது? 1

(6) நரை முடித்துச் சொல்லால் 5
முறை செய்தான் சோழன்—சரித்திரக் குறிப்பு என்ன?

(7) 'பதி யிழந்தனம்' என்ற செய்யுளின் கருத்தை எளிய நடையில் எழுதுக. 5

(8) கவி வீரராகவர் கற்றதெங்ஙனம்? 3

III. (1) பறக்கும் பறவையின் சிந்தனை என்ன? 5

(2) பொருள் கூறுக:— 5

பசுபதி, நல்கல், சிற்பம், தண்ணளி, முச்சுடர்.

IV. (1) இராமகிருஷ்ணரின் முடிந்த கொள்கைகள் யாவை? 4

(2) திருக்கேதார யாத்திரை யார் செய்தார்? 1
தமிழுலகத்திற்கு அவர் செய்யும் திருப்பணி யாது? 4

(3) குகைக் கோவில் எங்கு, எவ்வாறு அமைந்துள்ளது? 3

(4) புகை குடிப்பதால் ஏற்படும் தீமைகள் யாவை? 2

V. (1) பாவலர் பங்கா எவ்வாறு இழுத்தார்? 2

(2) 'காலத்தின் அருமை' என்ற பாடத்தின் படிப்பினை என்ன? 2

VI. (1) உதாரணம் வேண்டும்:— 5

பலவின்பால், முன்னிலை, விளிவேற்றுமை, பெயரெச்சம், செயப்பாட்டுவினை.

(2) கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை யிடுக:— 5

| அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாக நாங்கள் கேட்டதுமில்லை | படித்ததுமில்லை | | என்று அவர்கள் விளம்பினார்கள் |

VII. கீழ் கண்டுள்ளவைகளில் ஒன்றைப்பற்றி ஒரு பக்கத்திற்குள் கட்டுரை எழுதுக:— 20

(1) உனது ஊரில் நாட்டின் விடுதலைத் திருநாள் கொண்டாட்டம்.

(2) கிராம நூல் நிலையம் அளிக்கும் நன்மைகள்.

(3) கிராமச் சந்தை.

மொத்தம் . . 100

## ELEMENTRY MATHEMATICS.

*Time*—Two hours.

குறிப்பு.—(1) ஒவ்வொரு கேள்விக்கும் முழு வழியும் காட்டப் படவேண்டும்.

(2) எழுத்து தெளிவாயும் அழகாயும் இருத்தல் வேண்டும்.]

மார்க்குகள்.

I. (a) இரு தந்திக்கம்பங்களுக்கு இடையேயுள்ள தூரம் 80 கெஜமானல், அரை மைல் தூரத்தில் எத்தனை தந்தி கம்பங்கள் இருக்கும்? 5

(b) ஒரு ரயில் வண்டி மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓடுகிறது. அதன் வேகம் விநாடிக்கு (செகன்டுக்கு) எத்தனை அடி ஆகும்? 5

II. ஒரு சாலையின், இரு அடுத்தடுத்த பர்லாங்கு கல்களுக்கு இடையே உள்ள தூரத்தை, ஒரு மீடர் கோலாலும் ஒரு செயினினுலும், ஒருவன் அளக்கிருன். தூரத்தை மீடர்களிலும், செயின்களிலும் சொல்லு. 10

III. ஒருவன் தன் சொத்தின் ·25 பாகத்தைத் தன் மனைவிக்கும், ·4 பாகத்தை தன் மகனுக்கும், மீதியைத் தன் பெண்ணுக்கும் கொடுக்கிருன். மகனுக்குப் பெண்ணைக்காட்டிலும் ரூ. 80 அதிகம் வந்தது. அந்த மனிதன் சொத்து எவ்வளவு? பெண்ணுக்குக் கிடைத்தது எவ்வளவு? 12

IV. ஒரு பள்ளிக்கூட மாணவன் தன் வீட்டிலிருந்து புறப்பட்டு ஸ்டேஷனுக்கு மணிக்கு 4 மைல் வேகத்தில் போனுன். திரும்பி வீட்டுக்கு வரும்போது மணிக்கு 3 மைல் வேகத்தில் வந்தான். நடையின் சராசரி வேகம் என்ன? 12

V. ஒரு கடைக்காரன் ஒவ்வொரு சாமானின் விலையையும் $8\frac{1}{3}\%$ குறைத்தான். ஒரு பையன் ஒரு பேனாவை ரூ. 5-8-0 க்கு வாங்கினால், அதன் பழைய விலை என்ன இருந்திருக்கும்? **12**

VI. ஒரு தகப்பனார் தன் 14 வயது பிள்ளை பேரில் ஒரு பாங்கியில் ஆண்டுக்கு 1-க்கு $4\frac{1}{2}\%$ தனி வட்டியில் கொஞ்சம் பணம் போட்டார். பிள்ளை 18 வயதானபொழுது, அந்தப் பணம் ரூ. 1,180 ஆயிற்று. தகப்பனார் பாங்கியில் போட்ட பணம் எவ்வளவு? **10**

VII. 24 பேர் ஒரு வேலையை 20 நாட்களில் செய்வார்கள். அந்த வேலையை 15 நாட்களில் செய்து முடிக்க இன்னும் எத்தனைபேர் தேவை? **10**

VIII. ஒரு முக்கோண வடிவமான இடத்தின் பக்கங்களின் நீளம் 24 அடி, 30 அடி, 18 அடி. முதலிரு பக்கங்களுக்கும் இடையேயுள்ள கோணம் 60°. ஸ்கேலுக்கு ஒரு படம் வரைந்து அதன் பரப்பைக் கண்டுபிடி. **12**

IX. 168 அடி விட்டமுள்ள (diameter) ஒரு வட்ட வடிவமான வயலுக்கு வேலி போடவேண்டும். ஒரு கெஜத்துக்கு ரூ. 0-2-6 வீதத்தில் வேலிபோட என்ன செலவாகும்? **12**

மொத்தம் .. **100**

## HISTORY, GEOGRAPHY, CIVICS

*Time*—Two hour

### History

**மார்க்குகள்.**

I. ஒரே வார்த்தையில் விடை கொடு :— **8**

(1) அடிமை வமிசத்தின் முதல் அரசன் யார்?

(2) அடிமை யரசர்களில் மிகப் பிரசித்திப் பெற்ற அரசன் யார்?

(3) கடைசி லோடி அரசன் யார்? யாரால் தோற்கடிக்கப்பட்டான்? எப்பொழுது? எங்கே?

(4) அக்பரை பால்யத்தில் காப்பாற்றியவர் யார்?

(5) அக்பரின் சிறந்த சிநேகிதரும், ஆலோசனைக் கூறுபவருமாகயிருந்தவர் யார்?

(6) ஜஹாங்கீர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த இரண்டு ஆங்கிலேயர்கள் யார்?

(7) ஷாஜஹான் காலத்தில் ஏற்பட்ட முக்கிய கட்டடங்கள் யாவை?

(8) சிவாஜி எங்கு, எப்பொழுது, முடி சூடப்பட்டார்?

(9) அவுரங்கசீப் சிவாஜியை எதிர்க்க யாரை அனுப்பினர்?

(10) ஆப்கானியருடன் போர் செய்ய மறுத்து தன் பதவியை ராஜிநாமா செய்த வைஸ்ராய் யார்?

II. (a) கிருஷ்ணதேவராயர் சிறந்த வித்வானென்றும், கல்வியை ஆதரித்தவரென்றும் விளக்கிக் கூறுக. 5

(b) விஜயநகர ராஜ்யம் க்ஷீணித்ததின் காரணங்கள் யாவை? 4

III. அக்பரின் ராஜ்ய பரிபாலனத்தைப்பற்றி சுருக்கி எழுதுக. 5

IV. உதவிச்சேனை ஏற்பாட்டை ஸ்தாபித்தவர் யார்? எங்தெந்த ராஜ்யங்கள் அதை அங்கீகரித்தன? 6

V. சுருக்கமான குறிப்பு எழுதுக :— 12

(1) மயிலாசனம்.

(2) மூன்றும் பானிபட் யுத்தம்.

(3) சாஸ்வத நிலவரி ஏற்பாடு.

(4) கடைசி மைசூர் யுத்தத்தின் பயன்கள்.

## Geography

VI. இந்தியா படம் வரைந்து கீழ் வருபவற்றைக் குறிக்க :— 14

(1) மூன்று முக்கிய துறைமுகங்கள்,

(2) இந்தியாவின் தலைநகர்.

(3) மூன்று முக்கிய கோடை வாசஸ்தலங்கள்.

(4) இரண்டு ஏரிகள்.

(5) இரும்பு, எஃகு, தொழிற்சாலை நடக்குமிடம்.

(6) கோலார் பொன் சுரங்கங்கள்.

VII. கீழ்க்கண்டவைகள் உலகத்திலுள்ள எந்தப் பிரதேசங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன ?— 12

(1) கோதுமை, (2) ரப்பர், (3) பருத்தி, (4) கம்பளி, (5) இரும்பு (6) பெட்ரோலியம்.

VIII. (a) தூந்திரப் பிரதேசத்தின் சீதோஷ்ண நிலையையும், அங்கு வசிப்பவரின் முக்கிய தொழில்களைப்பற்றியும் வருணித்தெழுதுக. 8

(b) ஐரோப்பாவிலுள்ள மூன்று முக்கிய நதிகளைக் கூறி, ஒவ்வொன்றைப்பற்றியும் இரண்டு வாக்கியங்களெழுதுக. 6

Civics

IX. ஜனங்கள் ஏன் வரி செலுத்தவேண்டும். கிராம பஞ்சாயத்தில் வசூலிக்கும் மூன்று வரிகளை எழுது. 10

X. இந்தியாவில் இரண்டு சட்டச்சபைகளுள்ள மூன்று மாகாணங்களைக் கூறு. சென்னை மாகாணத்தில் மேல் சட்ட சபை (Legislative Council) எவ்விதம், ஏற்படுத்தியுள்ளதென விவரித்துக் கூறு. 10

மொத்தம் ... 100

## ENGLISH (OPTIONAL)

*Time*—Two hours

Marks

I. Answer briefly *five* of the following questions, selecting not more then *two* from each of the groups (*a*), (*b*) and (c) :— 15

(*a*) (1) In what respects has India to develop to keep pace with the progressive nations of the world?

(2) How was the merchant tricked by the two blacksmiths?

(3) How did the clever doctor save himself and the king?

(*b*) (1) The earth goes round the sun, though the sun appears to move round the earth. How is this fact illustrated in the lesson on the sun?

(2) What do you understand by the statement that cleanliness is next to godliness?

(3) How did Sindbad finally throw off his shoulders the old man of the sea?

(4) How was Cindrella fitted up by the fairy for the King's ball?

(*c*) (1) Narrate an incident in the life of Nelson which shows his sense of honour or honesty.

(2) What do you learn of Napolean's character from his treatment of the British soldier?

(3) How did the Czar show his respect to the dead soldier and what lesson did his people learn from the Czar's example?

II. (1) Give the meaning of the following lines :— 6

"Be sure that rifles aim,
Swift choice of generous part,
Showed in its passing gleam
The depths of a brave heart."

(2) Describe briefly how the hunter, George Nidiver with-stood the grizzly bear 3

(3) Quote, preserving the verse form— 6

(*a*) The burden of the Miller's song.

(*b*) The Miller's reply to the king's question as to what made him sing so blithely.

III. (*a*) Make sentences of your own with the phrases given below:— **18**

To make leeway; to make headway.
To give way; to give away.
To lose heart; to lose one's heart.

(*b*) Rewrite as directed—

(1) He knows me. (In the passive voice.) **2**

(2) Pots are made of clay. (In the active voice.) **2**

(3) He is as clever as a fox. (In the comparative degree.) **2**

*Or*

Cow's milk is thinner than buffalo's milk. (In the positive degree,)

(4) "Fear?" replied the future hero "Grandmother, I never saw fear. What is it?" (In the indirect form of speech.) **5**

IV. Narrate in your own words, in not more than a page— **16**

In an unequal partnership the weaker party always suffers. How is this truth illustrated by the story of the giant and the dwarf?

*Or*

God helps those that help themselves. How is this truth illustrated by the lesson on the poor boy?

V. Write a letter to your brother, not more then half a page giving an account of a prize-distribution function at your school. **15**

*Or*

A friend's marriage that you attended.

VI. (*a*) Point out the principal and subordinate clauses in the following sentence:— **6**

"It then suddenly dawned on my mind *that* if a *pot* could be burnt *broken*, *it* could be burnt whole as well."

(*b*) Name the parts of speech of the words italicized in the above sentence. **4**

Total ... **100**

# கணக்கு சம்பந்தமான வாய்பாடுகள்

## 1. இந்திய நாணயம்

12 பைசா = 1 அணா
16 அணா = 1 ரூபாய்
$3\frac{1}{2}$ ரூபாய் = 1 வராகன்

*குறிப்பு*—4 பைசாவை ஒரு *துட்டு* என்றும், 1 பைசாவை *தம்பிடி* என்றும் சொல்லுவார்கள். ரூ. 16ஜ ஒரு தங்க மொஹரா என்று முன் காலத்தில் வழங்கி வந்தனர்.

## 2. ஆங்கில நாணயம்

4 பார்த்திங் = 1 பென்னி
12 பென்ஸ் = 1 ஷில்லிங்
20 ஷில்லிங் = 1 பவுன்

*மற்றும்*

2 ஷிலிங் = 1 பிளாரின்
5 ஷிலிங் = 1 கிரௌன்
21 ஷிலிங் = 1 கினி
27 ஷிலிங் = 1 மாய்டோர்

## 3. ஆங்கில நீட்டலளவை

12 அங்குலம் = 1 அடி
3 அடி = 1 கஜம்
220 கஜம் = 1 பர்லாங்
8 பர்லாங் = 1 மைல்
3 மைல் = 1 லீக்
1 மைல் = 80 சங்கிலி
1 சங்கிலி = 100 லிங்ஸ்
100 லிங்ஸ் = 22 கஜம்
10 சங்கிலி = 1 பர்லாங்

*இந்திய முறை*

3 அங்குலம் = 1 விரற்கடை
9 அங்குலம் = 1 சாண்
1 கஜம் — 2 முழம்
1 முழம் = 2 சாண்

## 4. நிறுத்தலளவை

*இந்திய முறை*

3 தோலா = 1 பலம்
8 பலம் = 1 சேர்
5 சேர் = 1 வீசை
8 வீசை = 1 மணங்கு
20 மணங்கு = 1 பாரம்

*இருப்புப்பாதை நிறை*

180 கிரெய்ன் = 1 தோலா
80 தோலா = 1 சேர்
40 சேர் = 1 மணங்கு

*ஆங்கில முறை*

16 டிராம் = 1 அவுன்ஸ்
16 அவுன்ஸ் = 1 பவுண்டு
112 பவுண்ட் = 1 அந்தர்
20 அந்தர் = 1 டன்

*மற்றும்*

1 ஸ்டோன் = 14 பவுண்ட்
1 குவாட்டர் = 28 பவுண்ட்
1 குண்டு = 56 பவுண்ட்

*மருந்து நிறுத்தலளவை*

20 கிரெயின் = 1 ஸ்குருப்ல்
3 ஸ்குருப்ல் = 1 டிராம்
8 டிராம் = 1 அவுன்ஸ்
12 அவுன்ஸ் = 1 பவுண்ட்

## 5. முகத்தலளவை

8ஆழாக்கு = 1 படி
8 படி = 1 மரக்கால் (அல்லது) குறுணி
5 மரக்கால் = 1 பறை
80 பறை = 1 கரிசை

*மற்றும்*

| | |
|---|---|
| 12 மரக்கால் | = 1 கலம் |
| 21 மரக்கால் | = 1 கோட்டை |
| 2 மரக்கால் | = 1 பதக்கு |

*தண்ணீர்-பானவகை*
*அளவைகள்*

| | |
|---|---|
| 2 பைன்ட் | = 1 குவாட் |
| 8 பைன்ட் | = 1 காலன் |
| 4 குவாட் | = 1 காலன் |
| 36 காலன் | = 1 பாரல் |

*ஆங்கில முறை*
*தானிய அளவை*

| | |
|---|---|
| 2 காலன் | = 1 பெக் |
| 4 பெக் | = 1 புஷல் |
| 8 புஷல் | = 1 குவாட்டர் |
| 5 குவாட்டர் | = 1 லோட் |

## 6. கால அளவை

*இந்திய முறை*

| | |
|---|---|
| 60 விநுடி | = நாழிகை |
| $7\frac{1}{2}$ நாழிகை | = 1 ஜாமம் |
| 8 ஜாமம் | = 1 நாள் |

*மற்றும்*

| | |
|---|---|
| 24 நிமிஷம் | = 1 நாழிகை |
| $2\frac{1}{2}$ நாழிகை | = 1 மணி |
| $3\frac{3}{4}$ நாழிகை | = 1 முகூர்த்தம் |

*ஆங்கில முறை*

| | |
|---|---|
| 60 செக்கண்ட் | = 1 மினிட் or நிமிஷம் |
| 60 நிமிஷம் | = 1 மணி |
| 24 மணி | = 1 நாள் |
| 7 நாள் | = 1 வாரம் |
| 52 வாரம் | = 1 வருஷம் |

*மற்றும்*

| | |
|---|---|
| 365 நாள் | = 1 சாதாரண வருஷம் |
| 366 நாள் | = 1 லீப் வருஷம் |

*முப்பது நாள் உள்ள மாதங்கள்*

ஏப்ரல், ஜூன், செப்டம்பர் நவம்பர். ஏனைய மாதங்கள் 31 நாட்கள் உள்ள மாதங்கள். லீப் வருஷத்தில் பெப்ருவரிக்கு 29 நாட்கள்.

*நூற்றாண்டு* = 100 வருஷம்

## 7. பரப்பளவைகள்

*ஆங்கில முறை*

| | |
|---|---|
| 144 சதுர அங்குலம் | =1 சதுர அடி |
| 9 சதுர அடி | =1 ச. கஜம் |
| 484 ச. கஜம் | =1 ச. சங்கிலி |
| 10 ச. சங்கிலி | =1 ஏகர் |
| 640 ஏகர் | =1 சதுரமைல் |

*மற்றும்*

| | |
|---|---|
| $30\frac{1}{4}$ சதுர கெஜம் | =1 ச. போல் |
| 16 சதுர போல் | =1 ச. சங்கிலி |
| 6400 சது. சங்கிலி | =1 ச. மைல் |
| 40 சதுர போல் | =1 ரூட் |
| 4 ரூட் | =1 ஏகர் |
| 10,000 லிங்ஸ் | =1 ச. சங்கிலி |
| 100 ஸெண்ட் | =1 ஏகர் |

## இந்திய முறை

| | |
|---|---|
| 2400 சதுர அடி | =1 மனை |
| 24 மனை | =1 காணி |
| 484 காணி | =1 ச. மைல் |
| 121 காணி | =160 ஏகர் |

*மற்றும்*

| | |
|---|---|
| 144 சதுர அடி | =1 குழி |
| 100 குழி | =1 மா. |
| 20 மா | =1 வேலி |

## 8. எண் வாய்பாடு

| | |
|---|---|
| 12 உருப்படி | =1 டஜன் |
| 12 டஜன் | =1 குரோஸ் |
| 20 உருப்படி | =1 ஸ்கோர் |
| 2 உருப்படி | =1 ஜதை |

## 9. காகித சம்பந்த அளவைகள்

| | |
|---|---|
| 24 காகிதத்தாள் | =1 குயர் |
| 20 குயர் | =1 ரீம் |
| 10 ரீம் | =1 பேல் |

## 10. நீட்டலளவை

(வேறுவிதம்)

| | |
|---|---|
| 10 மில்லி மீட்டர் | =1 சென்டி மீ. |
| 10 செ. மீட்டர் | =1 டெஸி மீ. |
| 10 டெ. மீட்டர் | =1 மீட்டர் |
| 10 மீட்டர் | =1 டெக்கா மீ. |
| 10 டெக்கா மீ. | =1 ஹெக்டா மீ. |
| 10 ஹெ. மீட்டர் | =1 கிலோமீட்டர் |

*குறிப்பு :*

1 அங்குலம் =2·54 சென்டி மீட்டர்
1 மைல் =1·6093கிலோமீட்டர்
1 கி. மீட்டர்= $\frac{5}{8}$ மைல் (சுமாராக)

---

# பூமி சாஸ்திரக் குறிப்புகள்

*உலகில் பெரிய :—*

1. *பாலம்* - சான்-பிரான்ஸிஸ்கோ ஒக்லண்ட், பே. (U. S. A.)
2. *கட்டடம்* - சோவியட் அரண்மனை (மாஸ்கோ)
3. *தேவாலயம்* - பரி. பீட்டர் ஆலயம் (ரோம்)
4. *பட்டணம்* - (லண்டன். ஜனத்தொகை 8,650, 000)
5. *கண்டம்* - ஆசியா (பரப்பிலும் ஜனத்தொகையிலும்)
6. *தேசம்* - பிரேசில் (தென் அமெரிக்கா)
7. *அணைக்கட்டு* - சுக்கூர்-சிந்து, இந்தியா
8. *பாலைவனம்* - சகாரா (ஆப்பிரிக்கா)
9. *தீவு* - கீரீன்லாண்ட்
10. *ஏரி* - சூப்பிரியர். (வ. அமெரிக்கா)
11. *சமுத்திரம்* - பசிபிக் சமுத்திரம்
12. *பூக்தோட்டம்* - எல்லோஸ்டோன். நேஷனல் பார்க்—. (U. S. A.)
13. *தீபகற்பம்* - இந்தியா.
14. *நட்சத்திரம்* - ஜுபிடர்
15. *ரயில்வே நிலையம்* - கிராண்ட் சென்ட்ரல். டெர்மினஸ்
16. *ஆறு* - அமேஜோன்-(S. அமெரிக்கா)
17. *சமஸ்தானம்* - சோவியத் யூனியன்
18. *ஆலயம் மணி* - மாஸ்கோ 200 Tons.

## கண்டுபிடித்தவர்கள் குறிப்புகள்

1. ஆகாயவிமானம் - உரைட் சகோதரர், அமெரிக்கா
2. வெறி மிருகம் கடி மருந்து - பாஷ்டியோர் பிரான்ஸிஸ்
3. நீராவியந்திரம்-ஜேம்ஸ் வாட்
4. கம்பியில்லா தந்திரேடியோ-மார்கோனி
5. (X-Ray) ஊடுருவும் கதிர் - ராண்ட்ஸ்ன், ஜெர்மனி
6. ரேடியம் - ஸ்ரீமதி கியூரி அம்மை (பிரான்ஸ்)
7. டிலிபோன் - (Bell) பெல் அமெரிக்கா.
8. தையல் மிஷின் - திம்மோனியர், பிரான்ஸ்
9. (டெலிவிஷன்) தொலைதூரக் காட்சி - (I. L.) பெயர்ட், இங்கிலாந்து,
10. தூரதிருஷ்டிக் கண்ணாடி - காலிலோ.
11. டைப்ரைட்டர் - ஷோலோஸ்
12. டாங், மோட்டார் - ஸ்லின்டன்

## அறிக்கை

A. (1) இக் கேள்வித்தாள் புத்தகமும், (2) இப்புத்தகத்துடன் (தமிழ் ஆங்கிலம் தவிர) மற்ற பாடங்களின் கேள்விகளுக்கு விடைகள் அடங்கிய புத்தகமும் :

B. சர்க்கார் கேள்வித்தாளில் கண்டுள்ள வினுக்களை ஒட்டி எம்மால் தயாரிக்கப்பட்ட (1) கணக்கு (2) சரித்திரம் (3) பூமி சாஸ்திரம் (4) அரசியல் முறை (5) விஞ்ஞானப் பாடங்களின் வினு விடைப் புத்தகமும் சேர்ந்த முழுப் புத்தகம் ரூ. 1-12-0

C. இக்கேள்வித்தாள் புத்தகம் தனியாகவும் கிடைக்கும். விலை 8 அணு

KABEER PRINTING WORKS, MADRAS 5

# 1949-ம் ஆண்டு E. S. L. C. எட்டாம் வகுப்பு சர்க்கார் பரீட்சை தமிழ்ப் பாடப் புத்தக விளக்க உரையும் வினாவிடையும்.

*BY*

**Pandit, K. J. VETHAMUTHU,**
**(Well Experienced E. S. L. C. Tamil Text Annotator From 1942.)**

## விலை ரூபாய் 1.

இது எட்டாம் வகுப்புப் பிள்ளைகளின் தமிழ் அறிவுக்கும் தேவைக்கும் ஏற்றபடி, அவர்கள் சர்க்கார் பரீட்சைக்குத் தாமாக எளிதில் கற்று முதன்மையாகத் தேறுவதற்கான வழிவகைகளைத் தெளிவாகக் காட்டி, எட்டாம் வகுப்புத் தமிழ்ப்பாடம் பல்லாண்டுகள் கற்பித்த அனுபவத்தைக் கொண்டு, எளிய இனிய நடையில் வெளியிட்ட நூலாகும் உடனே பெற்றுப் பலனடைவீர்களாக.

## HISTORICAL & GEOGRAPHICAL OUT LINE MAPS.

அளவு: டிராயிங் நோட். சயிஸ்—100-தாள் விலை ரு. 1—6—0

இந்த சுற்றுக்கோட்டுத் தேச படங்கள் Map Drawing வாங்கி, சரித்திரப்படம், பூமிசாஸ்திரப் படம் வரைந்து அதில் குறிப்பிட்டவற்றை வரையும் சிரமத்தையும் கால தாமதத்தையும் நீக்க வெளியிட்ட தேசப் படங்களாகும். உலகப்படம், ஐந்து கண்டங்களின் படம், இந்தியா, சென்னை நியூவிலாந்து, பிரிட்டிஷ் தீவுகள் போன்ற தேசப் படங்கள் எப்போதும் எங்களிடம் கிடைக்கும்.

## திருக்குறள்

I. II. III. IV. V. பாரங்களுக்கும்,
VI. VII. VIII. வகுப்புகளுக்கும் ஏற்றது.

ஆறு, ஏழு, எட்டு, வகுப்புகளுக்குச் சர்க்கார் புதிதாக வெளியிட்ட அறிக்கைப்படி, திருக்குறளில் தேர்ந்தெடுத்த பாட்டுகளுக்குத் தெளிவான பதப்பொருள், விளக்கவுரை, விசேடக் குறிப்புகளுடன் வெளியிடுகிறோம். விலை முறையே $3\frac{1}{2}$ அணா, 4 அணா, $4\frac{1}{2}$ அணா, 5 அணா, 6 அணா, மொத்த ஆர்டருக்குத்தக்க கமிஷன் தரப்படும்.

**விலாசம்: மானேஜர் சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்.**
66, முருகப்ப முதலி வீதி, புரசவாக்கம்
**வேப்பேரி சென்னை, 7.**